# I. பொருளாதாரப் பிரச்சனைகளும் கொள்கைகளும் — 1964.

முன்னுரை

1964ம் ஆண்டு, இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியின் அடிப்படையில் நோக்குகையில், 1963ம் ஆண்டைவிடக் கணிசமான அளவு சீர்திருந்திய ஓர் ஆண்டாக விளங்கியது. 1963ம் ஆண்டில் உண்மை நியதியின்படியான மொத்தத் தேசிய உற்பத்தி ஆக 1·9 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது மட்டுமன்றி, தனியாருக்கான உண்மை உற்பத்தியும் 0·6 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. மறுபுறத்தில் 1964ம் ஆண்டின் போது உண்மை நியதியின்படியான மொத்தத் தேசிய உற்பத்தி 4·5 சதவீதத்தாலும், தனியாளுக்கான உண்மை உற்பத்தி 2·1 சதவீதத்தாலும் உயர்ச்சியுற்றன என மதிப்பிடப்பட்டுள்ளன. தெங்கு, இரப்பர் போன்ற ஏற்றுமதி விளை பொருட்களின் நிகர உற்பத்தியில் முக்கியமான அதிகரிப்புகள் காணப்பட்டன. அத்துடன், நெல் உற்பத்தி, கைத்தொழில் உற்பத்தி உட்பட்ட உள்நாட்டுத் துறையின் நிகர உற்பத்தியிலும் அதிகரிப்புகள் காணப்பட்டன. எனினும், 1964ம் ஆண்டின் போது ஏற்பட்ட உயர்ந்த சதவீத வளர்ச்சி வீதம், ஓரளவில் 1963ம் ஆண்டினது பொருளாதாரத்தின் ஒப்புமையிற் குறைந்த முன்னேற்றத்தின் பிரதிபலிப்பேயாகும்.

1964ம் ஆண்டின் போதும் இலங்கை அதன் வெளிநாட்டுக் கொடுப்பனவுக் கணக்கில் கடுமையான அமுக்கங்களைத் தொடர்ந்தும் அநுபவிக்க நேரிட்டது. 1963ம் ஆண்டின்போது 9 சதவீதத்தால் தீட்சணமாக வீழ்ச்சியுற்ற வர்த்தக மாற்று விகிதம், 1964ம் ஆண்டில் மேலும் 3 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. இறக்குமதிகளின் மீது கடுமையான மட்டுப்படுத்தல்களிருந்த போதிலும், இலங்கை அதன் சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்கின் மீதான ஒரு குறையை அனுபவிக்க நேரிட்டது. இதன் விளைவாக, வெளிநாட்டுச் சொத்துக்களில் 510 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஒரு வீழ்ச்சியும், குறுகிய கால வெளிநாட்டுப் பொறுப்புக்களில் 400 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஓர் அதிகரிப்பும் ஏற்பட்டன. உணவுப் பொருட்கள் இறக்குமதிகளின் (குறிப்பாகச் சீனியின்) உலக விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, 1964ம் ஆண்டில் ஏற்பட்ட இலங்கையின் சென்மதி நிலுவைக் கஷ்டங்களுக்கு முக்கிய காரணியாக விளங்கியது.

அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் பணவீக்கக் குறையைக் குறைப்பதற்கு இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் உயர்ந்த விலைகளும் தடையாக இருந்தன. இப்பணவீக்கக் குறை, 1962/63ம் நிதியாண்டிலிருந்த 1620 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 1963/64ம் நிதியாண்டின்போது 1629 இலட்சம் ரூபாய்களாக இருந்தது. உணவு மானியச் செலவு 1963/64ம் ஆண்டின் போது 1394 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு, பிரதானமாக, சீனியின் மீதான இலாபத்தில் 795 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஒரு வீழ்ச்சியின் விளைவாக உண்டானது. 1964ம் ஆண்டின்போது 920 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்த, தனிப்பட்டோர் துறைக்கும் அரசாங்கக் கூட்டுத் தாபனங்களுக்குமான வர்த்தக வங்கிக் கொடுகடன் வசதிகளும், பண நிரம்பல் விரிவடைதற்குக் காரணமாயிருந்தன. மொத்தப் பண நிரம்பல், 1963ம் ஆண்டிற்குரிய அதிகரிப்பாகிய 1633 இலட்சம் ரூபாய்கள் அல்லது 12·2 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில், 1964ம் ஆண்டில் 1158 இலட்சம் ரூபாய்களால் அல்லது 7·7 சதவீதங்களால் அதிகரித்தது.

இறக்குமதிகளின் மீதான மட்டுப்படுத்தல்களைப் பின்னணியாகக் கொண்ட நாணயத்துறையிலுள்ள வீக்க அமுக்கங்கள், பொதுவிலை மட்டத்தின்மீது தொடர்ச்சியான அமுக்கங்களை விளைவித்தன. மேலும், பலதரப்பட்ட பொருட்களின் நிரம்பல்களில் தட்டுப்பாடுகளை இலங்கை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அந்நிய செலாவணிக் கஷ்டங்கள், இலங்கை தன் பூரண தேவைகளுக்கு அவசியமான மூலப் பொருட்கள் இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியவற்றை அடைவதற்குப் பெற்றிருக்கும் ஆற்றலை, மட்டுப்படுத்தத் தொடங்கின. இதனுல் இக்கஷ்டங்கள் அபிவிருத்தியைத்துரிதப்படுத்துவதற்குத் தடையாக அமைந்தது மட்டுமன்றி, பொருளாதாரத்தின் தற்போதைய கொள்ளளவு ஆற்றலைப் பூரணமாகப் பயன்படுத்துவதையும் மட்டுப்படுத்தின.

கடந்த காலத்தில் இலங்கை பொருளாதாரத் துறையில் அடைந்த மொத்த வளர்ச்சியின் வீதம், குறிப்பாகத் துரிதமாக அதிகரித்து வரும் சனத்தொகையின் சந்தர்ப்பத்தில், போதியளவில் அமையவில்லை எனக் கண்டிப்பாகக் கூறலாம். இலங்கை அதிகரித்து வரும் தனது தொழில் வர்க்கத்தினரின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்கும், வேலை வசதிகள் அளிப்பதற்குமாகத் தனது பொருளாதார வளர்ச்சி வீதத்தை துரிதப்படுத்துவது, மிகவும் அத்தியாவசியமான ஓர் அவசரத் தேவையாகும்.

இக்குறிக்கோளை அடைவதற்கான இலங்கையின் திறமை, அதன் இறக்குமதி வல்லமையின் திருப்திகரமற்ற வளர்ச்சியின் காரணமாகத் தடைப்படக்கூடும். இதை, உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தின் போதுள்ள இலங்கையின் இறக்குமதி வல்லமை பற்றிய அடிப்படைப் போக்குகள் மூலம், காணக்கூடியதாகவுள்ளது. இலங்கையின் தற்போதைய பொருளாதாரக் கொள்கையின் குறிக்கோள், நாணயத் துறையில் உள்ள சமமற்ற தன்மைகளைக் குறைப்பதும், அதிகரித்த ஏற்றுமதிகளின் மூலம் தனது வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலையினைப் பலப்படுத்துவதும், இயன்றளவு அதிகரித்த இறக்குமதிப் பதிலீட்டுப் பொருட்களைத் தயாரிப்பதும், வெளிநாட்டு மூலதனங்கள் கூடியளவில் இங்கு வருவதற்கு வழி வகுப்பதுமாக இருத்தல் வேண்டும். அத்துடன் அது, நுகர்ச்சிகளின் அதிகரிப்புக்களை எத்துணை அளவு இயலுமோ அத்துணை அளவிற்குக் குறைத்து, அதன்மூலம் முதலீட்டத்திற்கு மேலும் பணம் செல்வதற்கு வழி வகுத்தல் வேண்டும். முதலாம் பகுதியிலுள்ள அடுத்து வரும் பக்கங்களிற் காணப்படும் விரிவுரை, 1964ம் ஆண்டிற்குரிய பொருளாதார அபிவிருத்தி பற்றிய சுருக்கமான பொழிப்புரைக்குப் பின், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி பற்றியும், நாணய நிதித் துறைகளில் ஏற்பட்ட அநுபவம் பற்றியுமுள்ள சில அடிப்படைப் போக்குகளினதும் பிரச்சனைகளினதும் பகுப்புரையுடன் தொடங்குகின்றது. இப்பகுதியின் அடுத்துள்ள பிரிவுகளில், நாணய, நிதி வளர்ச்சிகள் பற்றியும், 1964ம் ஆண்டின் போதுள்ள இலங்கையின் வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் நிலைமை பற்றியும், மேலெழுந்தவாரியாகக் கூறப்பட்டுள்ளது. 1964ம் ஆண்டிற்கான இலங்கையின் பொருளாதாரத்தின் பல அம்சங்களையும் அடக்கிய, மேலும் விரிவுடைய ஒரு கருப்பொருட் பகுப்புரை, பகுதி IIல் தொடர்ச்சியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

## (1) 1964ம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சி

தற்காலிக மதிப்பீடுகளின்படி, 1964ம் ஆண்டின் போது மொத்தத் தேசிய உற்பத்தி, நடைமுறை விலைகளின்படி 6·0 சதவீதத்தாலும், நிலையான விலைகளின்படி 4·5 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது. தனியாளுக்கான நியதியின்படி, அதாவது சனத்தொகை அதிகரிப்பிற்கு இடம்விட்டு நோக்குகையில், தனியாளுக்கான உற்பத்தி, பணநியதியின்படி 3·5 சதவீதத்தாலும், உண்மை நியதியின்படி 2·1 சதவீதத்தாலும் உயர்ச்சியுற்றது.

உண்மை உற்பத்தியில் 1964ம் ஆண்டின் போது ஏற்பட்ட 4·5 சதவீதத்தைக் கொண்ட அதிகரிப்பு வீதம், கடந்த ஆண்டிற்குரிய ஆக 1·9 சதவீதத்தை விடக் கணிசமான அளவு சீர்திருந்திய தொன்றாகும். 1964ம் ஆண்டின் இவ்வதிகரிப்பிற்குப் பிரதானமான காரணி ஏற்றுமதித்துறையினது நிகர உற்பத்தியில் ஏற்பட்ட 7·0 சதவீதத்தைக் கொண்ட ஓர் கூர்மையான விரிவாகும். உள்நாட்டுத் துறையினது நிகர உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு 3·3 சதவீதத்தினதாகத் தாழ்ந்திருந்தது. ஏற்றுமதித் துறையில் எற்பட்ட விரிவானது, தேங்காயினதும் இரப்பரினதும் உற்பத்தியில் உண்டாகிய ஓர் அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்றது. தேயிலை உற்பத்தி 30 இலட்சம் இருத்தல்களால் அல்லது 0·6 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருக்கையில், தேங்காய் இரப்பர் ஆகியவற்றின் உற்பத்திகள், முறையே, 17·3 சதவீதத்தாலும், 6·5 சதவீதத்தாலும் உயர்ச்சியுற்றன. உள்நாட்டுத்துறை சம்பந்தப்பட்டமட்டில், கைத்தொழில், நெல் உற்பத்தி, சேவைகள் ஆகிய துறைகளில் அதிகரிப்புகள் காணப்பட்டன. நெல் உற்பத்தியின் அதிகரிப்பை நோக்குகையில் அவ்வதிகரிப்பானது, 13 இலட்சம் புசல்களாக அல்லது 2·6 சதவீதமாக இருந்தது. இவ்வதிகரிப்பு, 1963ம் ஆண்டிலேற்பட்ட அதிகரிப்பாகிய 11 இலட்சம் புசல்களை அல்லது 2·3 சதவீதத்தை விடச் சிறிது உயர்வானதாகும்.

நடைமுறைச் சந்தை விலைகளின்படியான மொத்த உள்நாட்டுச் செலவு, 7·2 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த உள்நாட்டுச் செலவின் மட்டம், சந்தை விலைகளின்படியான மொத்தத் தேசிய உற்பத்தியின் மட்டத்தை விட 1880 இலட்சம் ரூபாய்களால் கூடியதாக விருந்தது. இவ்வித்தியாசம் பெரும்பாலும், நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களை உபயோகிப்பதன் மூலமும், வெளிநாட்டுப் பொறுப்புக்களை அதிகரிப்பதன் மூலமும், ஈடு செய்யப்பட்டது.

தனிப்பட்டோர் நுகர்ச்சிச் செலவு, பிரதானமாக இறக்குமதிச் செலவுகளிலோர் அதிகரிப்பேற்பட்ட காரணத்தினால், 1964ம் ஆண்டில் 8·8 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த மூலதன ஆக்கம், 1963ம் ஆண்டில் 3·0 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றதற் கெதிராக, 1964ம் ஆண்டில் 1·7 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. 1964ம் ஆண்டிற்குரிய மொத்த மூலதன ஆக்கத்தின் வீழ்ச்சிக்குக் கையிருப்புக்கள் குறைவுற்றமையே காரணமாகும். எனினும், நிலையான மூலதன ஆக்கம் 3·2 சதவீதத்தைக் கொண்ட ஓர் அதிகரிப்பைக் காட்டியது. நிலையான மூலதன ஆக்கத்தின் அதிகரிப்பு முழுவதும் தனிப்பட்டோர் துறையிலேயே அடங்கியிருந்தது. அரசாங்கத்துறையில்[1] 11·3 சதவீதத்தைக் கொண்ட ஒரு வீழ்ச்சி காணப்பட்டது. சந்தை விலைகளின்படியான மொத்தத் தேசிய உற்பத்தியின் விகிதமாக, மொத்த நிலையான மூலதன ஆக்கம், 1963ம் ஆண்டிற்குரிய 13·8 சதவீதத்திலிருந்து, 1964ம் ஆண்டில் 13·5 சத வீதத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சி அடைந்தது.

## பொருளியல் வளர்ச்சிக்குரிய கண்ணோட்டம் — இறக்குமதி ஆற்றல் பற்றிய பிரச்சனை

இலங்கையின் உற்பத்தி சென்ற ஆண்டிற்குரிய தொடர்பான வீழ்ச்சியிலிருந்து தேறித் திருத்தமுற்று 1964ம் ஆண்டிற் காணப்படினும், இவ்வாண்டின் அனுபவம் இலங்கையில் சில அடிப்படை நீண்டகால பிரச்சனைகள் என்ன என்பது பற்றி வெளிக் கொணரும் வாய்ப்பினை ஏற்படுத்தியது. தொடர்ச்சியாக மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கைகள் அண்மைக் காலத்தில் இலங்கையின் நிதியிலும் நாணயத்திலும் ஏற்பட்ட விரிவைக் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது. இந்த விரிவு தொடர்ச்சியாக இந்நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளிலும் உள்நாட்டு விலைமட்டத்திலும் தாக்குதலை ஏற்படுத்தியது. இலங்கையில் வர்த்தகமாற்று விகிதத்தின் தொடர்ச்சியான பாதகமான இயக்கங்களும், இத்தாக்குதலுக்குப் பலமூட்டின. இலங்கையைத் தற்போது எதிர்நோக்கியுள்ள இன்னல்கள் நாணய—நிதி விரிவின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதினால் தீர்க்கக்கூடிய தன்மைத்தன அல்ல. வெளிநாட்டு ஒதுக்குப் பணம் குறைந்து வருவது அடிப்படைப் பிரச்சனைகள் சிலவற்றை வெளிக்கொணர உதவியிருக்கின்றது. இவை, அடிப்படைப் பிரச்சனைகள், விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான நிரம்பல்கள், பற்றியனவாயும் குறிப்பாக, இறக்குமதிப் பொருட்கள் பற்றியனவாகுமாம். நிதித் துறையில் சமநிலை இன்மையைக் குறைப்பதற்கும், உள்நாட்டு விலைமட்டத்தின் மேலுள்ள அமுக்கத்தைத் தளர்த்துவதற்கும் நாணயநிதி விரிவின் வேகத்தைக் குறைப்பது தேவையான தொரு நிபந்தனையாகும். ஆனால் இதை அடைவதற்கு இத்துடன் குறுகிய கால நெடுங்கால நடத்தையுடைய வேறு வழிகளையும் இணைக்க வேண்டியிருக்கிறது. இவ் வழிகள், இலங்கைக்குத் திருப்திகரமான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான பொருட் சாதனங்களை அடைவதற்கு வேண்டி, இலங்கையின் வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலையினைப் பலப்படுத்தும் நோக்கம் கொண்டனவாக வேண்டும்.

1963லும் பார்க்க 1964ல் இலங்கை கூடியளவு இறக்குமதிகளைத் தாங்கவேண்டிய நிலைபெற்றிருந்தது. இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்குகளை குறையவிட்டதன் மூலமும், வெளிநாட்டுக் குறுகிய காலக் கடன்களையும் கூட விட்டதன் மூலமுமே இந்நிலையை இலங்கை அடைய முடிந்தது. அதுமட்டுமன்றி இப்படிக் கூடுதலான இறக்குமதிப் பொருட்களின் வரத்துகூட இலங்கையின் ஆகக் குறைந்தளவு இறக்குமதித் தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியுமாகத் தோன்றவில்லை. பற்றுக் குறைகளும் தட்டுப்பாடுகளும் பலதுறைகளில் தென்பட்டன.

---

1. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் உட்படும்படியாக வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது.

புதிதாகத் தோன்றிய கைத்தொழிற் துறையின் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க ளவு முன்னேற்றம் பதியப்பட்டு இருந்ததெனினும், குறிப்பாக 1964ன் இறுதிக் காலத்தில் கைத்தொழிலுக்குரிய மூலப்பொருட்கள் துணைக் கருவிகள் போதாதிருந் தமை பெருமளவு புலப்பட்டது. அத்தோடு பல கைத்தொழில் முயற்சிகளது உற் பத்தி ஆற்றல்கள் நிறைவாகப் பயன்படுத்தாத தன்மைக்கும் போதிய சான்று காணப்பட்டது. உண்மையில் 1964ல் அந்நிய செலாவணித் தட்டுப்பாட்டினுல் தனது புதுக் கைத்தொழில் வளர்ச்சி வேகத்தை மேலும் நீடிப்பதில் இலங்கைக்கு வேண்டிய ஆற்றலுக்கு அபாயம் ஏற்படுவதற்குரிய அறிகுறிகள் தெளிவாகத் தெரிந் தன. இத்தகைய அந்நிய செலாவணித் தட்டுப்பாடு புது முயற்சிகளிற் தேவை யான உத்தரவுச்சீட்டு வழங்குவதற்கும் அம்முயற்சிகளின் நிறுவனத்திற்கும் தடை யாக அமையக்கூடும். மேலும் அவசிய தேவையற்ற நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியைத் தடைசெய்த பின்னரும் கூட, அந்நிய செலாவணியின் குறைவு வெளிப்படையாகத் தெரிந்தது குறிப்பிடத்தக்கதாம்.

இந்நிலைமை எதை எடுத்துக் காட்டுகின்றதெனின், இலங்கையின் "இறக்குமதி ஆற்றல்" இந்நாட்டின் விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய ஆகக் குறைந்த இறக்குமதித் தேவைக்கு ஏற்ற அளவு ஈடுசெய்வனவாக விரிவடையவில்லை என்பதையே. இரண்டாம் உலகப் போரை அடுத்து இடை இடை ஏற்பட்ட தடை களுடன் நிலவிவரும் ஒரு அடிப்படைப் போக்கையே இது பிரதிபலிக்கிறது. ஆனல் கடந்த ஓர் இரு ஆண்டுகளிற்தான் இந்தப் போக்கின் முழுத்தாக்குதலின் கடுமை யை உணர முடிந்தது. இறுதியாக ஆராயுகையில் இலங்கையின் இறக்குமதி ஆற் றல் வெளிநாட்டு மூலதன உள்வரவைத் தவிர்த்து ஏற்றுமதியினுல் பெற்ற வெளி நாட்டு வரவுகளினுல் ஒரு புறத்திலும், மறுபுறம் இறக்குமதி விலைகளின் போக்குக ளில் தங்கியிருக்கும் இவ்வரவுகளின் கொள்வனவு ஆற்றலினுலும் நிர்ணயிக்கப்படுவ தொன்றாகும். இதனுல் யாம் அறிவது யாதெனில் நாட்டின் ஏற்றுமதி உற்பத்தி அதிகரிப்பு முயற்சிகளால் மட்டும் தான் அந்நாட்டின் இறக்குமதி ஆற்றல் தங்கியி ருக்கவில்லை, என்பதே. அது ஏற்றுமதி இறக்குமதி விலைகளினது இயக்கங்களின் விளைவுமாகும் (அதாவது வர்த்தகமாற்றுவிகிதம்). ஏற்றுமதி இறக்குமதியின் வெளி நாட்டு விலைகளின் பாதகமான இயக்கங்களே, இலங்கையின் இறக்குமதி ஆற்றல் போதியளவு அதிகரிக்காமைக்கு ஒரு காரணமாம்.

இவை ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தியின் அதிகரிப்புகள் மூலம் இறக்குமதி வருவாய்களைப் பெருக்க இலங்கை செய்த முயற்சிகளைப் பெருமளவு பங்கப்படுத்தின. கடந்த பத்தாண்டுகளில், 1954 – 1963 கால எல்லையில், இலங்கை தனது பிரதான ஏற்றுமதிப் பொருளாகிய தேயிலையின் ஏற்றுமதித் தொகைகளைப் படிப்படியாகக் கூட்டியது. இவ்வதிகரிப்பு ஆண்டிற்குச் சராசரியாக 3·1 சதவீதத்தில் அமைந் திருந்தது. விதிவிலக்காக 1964ம் ஆண்டிற்தான் இலங்கையின் ஏற்றுமதித் தொகை யில் ஏற்றம் காணவில்லை. இரப்பர், தேங்காய் ஆகிய கைத்தொழில்களின் உற்பத்தி ஆற்றலைப் பெருக்குவதற்கு மாற்று நடல், சீரமைப்பு முதலிய விரிவான திட்டங் கள் மூலமாக இலங்கை முயன்றுள்ளது. எனினும் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் கொள்வனவு ஆற்றல் ஏற்றுமதிப் பொருட்களின் தொகைளில் ஏற்பட்ட அதிகரிப்புகளை விடக் குறைந்த வீதத்திலேதான் அதிகரித்தது. 1948– 1964 கால எல்லைக்கிடையில் ஆண்டிற்குச் சராசரி 2·7 சதவீத அடிப்படையில் இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளின் தொகை அதிகரித்தது. ஆனல் இந்த ஏற்றுமதியின் கொள்வனவு ஆற்றலோ, அதாவது இறக்குமதி ஆற்றல், ஆண்டிற்கு சராசரி 1·6 சதவீதம் தான் ஏறியுள்ளது. ஏற்றுமதித் தொகையின் வளர்ச்சி கூட மக்கட் தொகையின் வளர்ச்சிக்கு விகிதாச்சாரப்படியில் குறைந்தே விளங்குகிறது. ஆனல் இறக்குமதி ஆற்றலின் வளர்ச்சியோ குறிப்பிடத்தக்களவு குறைந்திருந்தது. இதன் விளைவு என்னவெனில் தனியாளுக்கான இறக்குமதிக் கொள்ளளவு அல்லது ஆற்றல் இக்காலத்தில் படிப்படியாகக் குறைந்து வருகின்றதென்பதேயாகும். வெளி நாட்டு ஒதுக்கு நிதியை உபயோகித்தும், வெளிநாட்டு மூலதனம் உள்வந்தும் இவ்வித விளைவின் போக்கை மாற்றுவிடின் நிட்சயம் தனியாளின் இறக்குமதி நிரம்பலின் தொகை பாதிக்கப்பட்டே தீரும். கீழே கொடுக்கப்பட்ட அட்டவணை உலகப் போரை அடுத்து இலங்கையில் நிலவிய ஏற்றுமதித் தொகையினதும் இறக்கு மதி ஆற்றலினதும் போக்கை எடுத்துக் காட்டுகிறது.

அட்டவணை I—1

## ஏற்றுமதித் தொகையினதும் இறக்குமதி ஆற்றலினதும் குறிகாட்டிகள்

(ஆண்டுச் சராசரி)

அடிப்படை ஆண்டு 1948=100

| | ஏற்றுமதித் தொகை | இறக்குமதி ஆற்றல் | தனியாளுக்கான ஏற்றுமதித் தொகை | தனியாளுக்கான இறக்குமதி ஆற்றல் |
|---|---|---|---|---|
| 1948–51 .. .. .. | 112 | 108 | 107 | 103 |
| 1952–55 .. .. .. | 119 | 112 | 103 | 97 |
| 1956–60 .. .. .. | 134 | 122 | 96 | 94 |
| 1961–64 .. . .. | 144 | 129 | 99 | 88 |

(1) ஏற்றுமதிகளின் கொள்வனவு ஆற்றலைத்தான் இங்கு இறக்குமதி ஆற்றல் என்று வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது.

அதாவது:- $\frac{\text{ஏற்றுமதிப் பெறுமதி}}{\text{இறக்குமதி விலைக்குறிகாட்டி}} \times 100$

அண்மைக் காலம் வரை இலங்கையின் தனியாளின் இறக்குமதி நிரம்பல்களின் வீழ்ச்சிப் போக்கு இறக்குமதிப் பொருட்களின் போதாமை வடிவத்தில் தீவிரமாக வெளிப்படையாகத் தெரியாதிருந்ததற்கு முக்கிய காரணம் என்னவெனில், இலங்கை தனது வெளிநாட்டு ஒதுக்குப் பணத்தைச் செலவழித்து அதன்மூலம் கூடியளவு இறக்குமதி உள்ளோட்டத்தைத் தாங்கும் ஆற்றலைப் பெற்றதென்பதேயாகும். வேறு சொற்களில் விளம்பின், 1957 — 1960 கால எல்லையில் வெளிநாட்டு ஒதுக்குப் பணத்தைப் பயன்படுத்தியமை இலங்கையின் இறக்குமதி ஆற்றலின் அடிப்படைப் போக்குகளை மூடி மறைக்கவும் தனது "வருவாய்க்கு மேலாக வாழ்க்கை"யை மேற்கொள்ளவும் உதவிற்று. இங்கு வெளிநாட்டு ஒதுக்குப் பணம் குறைந்து கொண்டு போவதினுல் அடிப்படைப் பிரச்சனையாகிய இலங்கையின் இறக்குமதி ஆற்றலின் போதாமை வெளிப்படையாகத் தெரியவந்துள்ளது. இலங்கைக்கு வெளிநாட்டு ஒதுக்குப் பணமும், வெளிநாட்டு மூலதனத்தின் உள்ளோட்டமும், உதவியும் இல்லாத நிலையில், இந்நாடு, தனது இறக்குமதிச் செலவைத் தனது ஏற்றுமதி வருவாய்க்கமையக் குறைப்பதைத் தவிர வேறு வழியில்லை.

இதில் உள்ள கசப்பான உண்மை யாதெனில் இலங்கையின் விரைந்த பொருளியல் வளர்ச்சிக்கும், வளர்ந்து கொண்டு போகும் மக்கட் தொகையின் இன்றியமையாத தேவைகளுக்கும் ஏற்ற முறையில் கூடிக்கொண்டு போகும் நிரம்பல் தொகையை நிறை செய்யும் முறையில் இந்நிலை அமையவில்லை என்பதேயாகும். ஓர் அளவு இப்பிரச்சனையைத் தீர்க்க இறக்குமதிப் பதிலீட்டு வழிமுறைகள் துணைசெய்யக்கூடுமெனினும், இந்த வழிவகைகளுக்கும் பின்னர் விபரித்துள்ளபடி வரையறைகள் உண்டு என்பதை யாம் உணரவேண்டும்.

இங்கு யாம் கருத்தில் கொள்ள வேண்டிய விடயம் ஒன்றுண்டு. அது என்னவெனில், இலங்கையின் நீண்ட கால இறக்குமதி ஆற்றல் பிரச்சனை அதனின் உள்நாட்டு நாணய—நிதி விரிவோடு நேரடித் தொடர்பு கொண்டதல்ல என்பதேயாகும். 1950 – 1960 கால எல்லையின் இறுதிக் கட்டத்தில்தான், கட்டுப்பாடு குறைந்த இறக்குமதி உத்தரவுச் சீட்டு முறையின் பின்னணிச் சூழ்நிலையில் நாணய நிதி விரிவு தொடங்கியது. ஆனுல் இச்சூழ்நிலை வெளிநாட்டு ஒதுக்குப் பணத்தின் சார்பான கூரிய வீழ்ச்சிக்கு வழிகோலியது. நாணய விரிவு குறைந்தளவினதாக அமைந்திருப்பின் வெளிநாட்டு ஒதுக்குப் பணத்தின் படிப்படியான வீழ்ச்சிக்கு மட்டுமே காரணமாய் அமைந்திருக்கும். இது, இலங்கை தனது இறக்குமதியை ஏற்றுமதி வருவாய்க்கு அமையக் குறைக்க வேண்டிய நிலையின் காலஎல்லையை

ஒத்திப்போட உதவியிருக்கும். இந்த இடைவெளியைப் பயன்படுத்தி வெளிநாட்டுக் கொடுப்பனவுகளின் நிலையை வலிவு பெறச் செய்ய இலங்கை முயலாவிடின் விரைவில் அல்லது காலகதியில், இந்நாடு, தனது போதாத ஏற்றுமதி வரவுகளின் உள்வரவுக்கு மேற்பட்ட இறக்குமதிகளுக்கு நிதியீட்டத் தனது வெளிநாட்டு ஒதுக்கல்கள் உதவமுடியாத ஒரு நிலையில் இருப்பதை, எதிர்நோக்க நேரிடும். வேறு சொற்களில் எடுத்துரைப்பின், வர்த்தக மாற்று விகிதத்தின் தொடர்ச்சியான பாதகப் போக்கும் இதன் காரணத்தினுல் இறக்குமதி ஆற்றலில் ஏற்படும் மெதுவான வளர்ச்சியும், இறக்குமதி நிரம்பல்களில் ஏற்படும் போதாமை ஒட்டிய பிரச்சனையை, இலங்கை, நெடுங்காலம் ஒத்திவைக்க முடியாதென்பதைக் காட்டிகிறது.

அபிவிருத்தியடையும் நாடுகளின் வளர்ச்சிக்கு ''அந்நிய முட்டுக்கட்டை'' பிரச்சனையே காரணமாய் அமைந்திருக்கிறதென்ற கருத்து இன்று பெருமளவு பலரால் ஏற்கப்பட்டு வருகின்றது. உள்நாட்டு சேமிப்புகளை சேர்க்கும் முயற்சியினுல் மட்டும் திருப்திகரமான பொருளியல் வளர்ச்சிவேகத்தை ஏற்படுத்துவதற்குரிய போதிய சூழ்நிலை ஏற்படுமென்று கருதமுடியாது. மூலப் பொருட்கள், பொறிகள், துணைக்கருவிகள் முதலியவற்றின் அதிகரிக்கும் வருகையைப் பொறுத்தே உறுதியான வளர்ச்சியும், குறிப்பாக கைத்தொழில் ஆக்கமும் தங்கியிருப்பது மட்டுமன்றி அவை, கூடிக் கொண்டு செல்லும் பணவருவாய் தோற்றும் கேள்வியை நிறைவு செய்வதற்கான நுகர்வுப்பொருட்கள் நிரம்பலிலும், தங்கியிருக்கின்றன. அபிவிருத்தி அடைந்த மிகப் பெரிய நாடுகள் கூட மிக அருமையாகத்தான் பரந்த பல்வகை இயற்கைச் சாதனங்கள் அல்லது ஆரம்பத் தயாரிப்பு ஆற்றலைத் தம்முள் அடக்கித் தமது எல்லைக்குள்ளேயே தமக்குத் தேவையானவற்றை பெற்றுக்கொள்ளும் நிலையில் உள்ளன. சிறிய நாடுகளின் இயற்கை வளமோ குறைவானதென்பது வெளிப்படை. எந்த நாட்டுலும் அதனின் ஆரம்ப வளர்ச்சி நிலைகளிலாவது சிறிய நாடுகளைப் பொறுத்த மட்டில் ஏறக்குறைய எக்காலத்திலும் தவிர்க்க முடியாதபடி தமது பலதரப்பட்ட தேவைகளை நிறைவு செய்வதற்த வெளிநாடுகளின் உதவியை நாடியே வாழ வேண்டியிருக்கிறது. ஒருநாட்டின் வெளிநாட்டு வரவுகள் அதனின் இறக்குமதி ஆற்றல் போதியளவில் வளர்ச்சிபெற்று, வேண்டிய இறக்குமதித் தேவைகளைக் கொள்வனவு செய்யும் ஆற்றலைக் கொணராவிடின் அந்நாட்டின் முழுமையான பொருளியல் வளர்ச்சி வேகம், குன்றுவதைத் தவிர்க்க முடியாது. பெரும் தொகையான சாதன மூலதனம் செய்ய ஏற்றமுறையில், உள்நாட்டு சேமிப்பு கூடுவதினுல் மட்டும் விரைந்த பொருளியல் வளர்ச்சிக்கு ஏற்ற முதலீட்ட முறை ஏற்படும் என்று எடுத்துரைக்க முடியாது. காரணம், பொறிமுறையியலின் வழி துரித பொருளியல் வளர்ச்சிக்குத் தேவையான இறக்குமதிப் பொருட்கள் கிடையாதவரை இத்தகைய வளர்ச்சியை எதிர்பார்க்க முடியாது.

இலங்கைப் பொருளாதாரத்தில் இறக்குமதித்துறை, எப்பொழுதும் குறிப்பிடத்தக்க முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரத்தின் தனது வளர்ச்சிக்குத், தன்னில் மட்டும் தங்கியிருக்க முடியாத ''சிறந்த'' தன்மையையே, இது எடுத்துக்காட்டுகிறது. 1964ல் மொத்த தேசீய உற்பத்தியில் 28 சதவீதத்தை இறக்குமதி தன்னுள் அடக்கியுள்ளது. ஆனுல் இவ்விகிதாச்சாரம் கூட இறக்குமதியின் முக்கியத்துவத்தை முழுமையாகக் காட்டவில்லை.

மொத்த தேசிய உற்பத்தியில் இருந்து சேவைகளை நீக்கின், 1964ல் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் 47 சதவீதத்தை, இறக்குமதிப் பொருட்கள் பெறுகின்றன. தொடர்ந்து, மொத்த தேசீய உற்பத்தியில் இருந்து, சந்தைக்கு விடக்கூடிய பொருட்களின் தொகையைப் பெறும் நோக்கத்துடம் உணவுப் பொருட்களை நீக்கின், சந்தை நிரம்பல்களின் 53 சதவீதத்தை இறக்குமதி ஆட்கொண்டுள்ளது புலப்படுகிறது. இதனுல் உற்பத்தியை நிலையாக வைத்திருப்பதற்கோ அன்றிப் பெருக்குவதற்கோ அல்லது அவசியமான நுகர்வுப்பொருட்களைப் பெறுவதற்கோ எல்லா இறக்குமதிகளும் கட்டாயம் தேவை என்பதல்ல பொருள். ஆனுல் ஏறக்குறைய இரண்டாண்டுகளாக இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கு நிதி மட்டத்தின் போதாக்குறை காரணமாக இறக்குமதிப் பொருட்களைக் கடுமையாக மட்டுப் படுத்தியதோடு அவசியமற்றதென்று கருதப்பட்ட ஏனைய பல இறக்குமதிப் பொருட்கள் மீது முற்ருகத் தடைவிதிக்கும் நிர்ப்பந்த நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. உண்மையில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் இறக்குமதி மூலப்

பொருட்களையும் முதற் பொருட்களையும் தழுவும் விதத்தில் விரிவாக்கப் பட்டுள்ளன. உற்பத்தியையும் வளர்ச்சி முயற்சிகளையும் பாதிக்காது இனியும் இறக்குமதிகளைக் குறைப்பதற்கு இடம் மிகக் குறைவு. மாருக இலங்கையின் வருங்காலப் பொருளியல் வளர்ச்சிக்கு மூல முதற்பொருட்களின் இறக்குமதிப் பெருக்கம் மிகத் தேவைப்படுகிறது. இலங்கை இப்பொருட்களைப் பெறும் ஆற்றலை எதுவிதத்திலும் யாம் தடைசெய்யின் அதனின் அபிவிருத்தி முயற்சிக்குத் தீங்கு விளையும். இலங்கையின் பொருளாதாரம் திறந்த தன்மையுடையதாய் இருப்பதினுல் அதன் வளர்ச்சிக்கு "அந்நிய முட்டுக்கட்டை" உண்மையிலேயே குந்தகமாய் அமைந்துள்ளது.

ஈழத்தின் இறக்குமதி ஆற்றலை உயரச் செய்வதே மிக இன்றியமையாத அவசரப் பொருளாதாரச் சிக்கல்களுள் ஒன்றக 1964ல் எழுந்துள்ளது. ஆதலால், கொள்கை உருவாக்கத்தில், இலங்கையின் பொருளாதாரப் பிரச்சனையின் இவ்வம்சத்திலும், கூடிய கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. பொதுப்படையாகக் கூறுகையில் இப்பிரச்சனைகளுக்குரிய மாற்று மருந்தை மூன்ருக வகுக்கலாம். அவையாவன, ஏற்றுமதி வருவாய் அதிகரிப்பு, இறக்குமதிக்குப் பதிலீடு, வெளிநாட்டு மூலதனத்தை அதிகரித்தல் ஆகியனவாம். சுருக்கமாக இவ் ஒவ்வொன்று பற்றியுமான பிரச்சனைகள் சிலபற்றி, தனித்தனியே ஆராய்தல் பயனுடையதாம்.

## ஏற்றுமதி வருவாய்கள்

இலங்கையின் இறக்குமதி ஆற்றலைக் கூட்டுவதற்கு முதன்மையானதும் மிக வெளிப்படையானதுமான வழி, தனது ஏற்றுமதி வருவாய்களை அதிகரிக்கப்பண்ணுதலேயாகும். உண்மையில், ஏனைய வழிகளால் எத்தன்மையான பயன்கள் பெறப்படினும், அவசியமாக இத்துறையின் மூலமாகவே, இறக்குமதி ஆற்றலின் பிரச்சனைக்கு மிக அடிப்படையான முறையிலும், நீண்ட கால முறையிலுமான ஒரு தீர்வு காணமுடியும். எனினும், இலங்கையின் துரித பொருளியல் வளர்ச்சிக்கு அவசியமான இறக்குமதித் தேவைகளைக் கொள்வனவு செய்வதற்குப் போதியளவு, ஏற்றுமதி வருவாய்களை அதிகரிக்கும் வழியில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. ஏற்கனவே காட்டப்பட்டுள்ளபடி, ஏற்றுமதி அளவுகளில் அதிகரிப்புகளிலிருந்த பொழுதிலும், ஏற்றுமதிகளினது கொள்வனவு ஆற்றலின் வளர்ச்சி வீதம் கடந்த பதினைந்து வருடங்களில் 1·6 சதவீத வருடாந்தச் சராசரியை மட்டுமே பெற்றிருந்தது. இலங்கை தனது அதிகரித்து வரும் இறக்குமதித் தேவைகளை ஏற்றுமதிகளினது கொள்வனவு ஆற்றலின் அதிகரிப்பின் மூலம் மட்டுமே பூர்த்தி செய்ய வேண்டுமாயின், ஏற்றுமதிக் கொள்வனவு ஆற்றல், கடந்த காலத்தில் பெற்றிருந்த அதிகரிப்பு வீதத்தின் விரைவினை விடக் கணிசமான அளவு விரைவாக அதிகரித்தல் வேண்டும். ஏனைய அபிவிருத்தியடையும் நாடுகளைப் போலவே, இலங்கைக்கும், மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தைப் பொறுத்தமட்டில், தரப்பட்ட ஓர் இலக்கையடைவதற்கு (உதாரணமாக வருடத்திற்கு 6 சதவீதம்) இறக்குமதிகளின் வருடாந்த வளர்ச்சி வீதத்தின் அதிகரிப்பு, இவ்வீதத்திலும் மேலும் விரைவானதாக அமைந்திருத்தல் அவசியமாகலாம்.[1] இதனுல் அறியப்படுவது யாதெனில். ஏற்றுமதி வருவாய்கள் மட்டுமே இறக்குமதிகளுக்கு நிதியீட்டத் தனித்தொரு மூலமாக அமைவதாயின், மொத்தத் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பை விட ஏற்றுமதிகளின் கொள்வனவு ஆற்றலினது அதிகரிப்பின் வேகம் கூடியதாக அமைதல் வேண்டும். ஆனுல், இலங்கையினது விளைமுதல் பொருட்களின் ஏற்றுமதியில் தற்போதைய உலகச் சூழ்நிலையின் போக்குகளின் அடிப்படையில், அத்துணையளவு விரிவாக்கம் அடையப் பெறுவதற்கான வாய்ப்புகள் உண்மையிற் குறைவாகவே உள்ளன.

இது, இலங்கையை மட்டுமன்றி, ஏற்றுமதிகளிற் தங்கியிருக்கும் நாடுகள் யாவற்றையுமே எதிர்நோக்கியுள்ள பெரிய பிரச்சனைகளுள் ஒன்ருகும். கைத்தொழில் அபிவிருத்தியில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளின் சந்தைகளில் நிலவும் ஏற்றுமதிப் பொருட்களின் கேள்வி அண்மை வருடங்களில் மெதுவாகவே ஏற்றமடைந்துள்ளது. மேலும், பண்டமாற்று அல்லது, வேறு வழிகள் போன்ற ஒருங்கு சேர்ந்த சர்வதேச முயற்சிகளால் இப்பிரதான பொருட்களின் விலைகளைத் திட்டப் படுத்தினுலல்லது, இப்பாதகமான போக்குகளை எதிர்காலத்தில் மாற்றியமைப்பது

1. ஐக்கிய நாடுகள் "உலகப் பொருளாதார அளவை—1963" பகுதி 1 ஐக்கிய நாடுகள், நியூயார்க்.

சபலம். தற்காலச் சூழ்நிலையில் 1963ம் 1964ம் ஆண்டுகளில், சில பிரதான பொருட்களில், இடையிடையே அல்லது சுழற்சியாக ஏற்பட்டன போன்ற விலை அதிகரிப்புகள் ஏற்படக்கூடும். ஆனால் இவ்வதிகரிப்புகளொன்றும், இலங்கையின் ஏற்றுமதிகளைப் பொறுத்தமட்டில், நன்மை பயக்கவில்லை. மேலும், இவ்வதிகரிப்புகள், குறுகிய காலம் அல்லது ஒரு வருடத்திற்கே நிலைக்கக்கூடிய தன்மைத்தனவாகையால், இந்நீண்ட கால விலை வீழ்ச்சிப் போக்குக்களை மாற்றி அமைக்கக்கூடிய வல்லமை படைத்தன அல்ல. பிரதான பொருட்களை உற்பத்தி செய்யும் நாடுகள் தமது ஏற்றுமதி வருவாய்களைக் கூடிய உற்பத்தியினால் பராமரிக்கவோ, அல்லது அதிகரிக்கவோ முயற்சித்தல், விலைகளின் வீழ்ச்சியையே இன்னும் மோசமடையச் செய்வதாக முடியலாம். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, கடந்த 15 வருடகாலமாக இலங்கையின் உற்பத்தியை அதிகரிக்க எடுத்த முயற்சிகள் ஏற்றுமதி வருவாயில் ஒப்பியல்பில் அதிகரிப்பை ஏற்படுத்தவில்லை. மேலும், கைத்தொழில் இறக்குமதிகளினது விலைகளின் ஏற்றப்போக்கு, ஏற்றுமதி வருவாய்களின் கொள்வனவு ஆற்றலை மேலும் குறையச் செய்தது. உண்மையில் 1950–60ம் ஆண்டுகளில் குறிப்பாக 1955ம் ஆண்டிலிருந்து 1960ம் ஆண்டுவரையில், பிரதான பொருட்களுக்கும் தயாரிப்புப் பொருட்களுக்கும் இடையிலுள்ள வர்த்தக மாற்று விகிதப் போக்கு, தயாரிப்புப் பொருட்களின் சார்பாக விளங்கியதன் காரணமாகத், தொடர்பான கைத்தொழில் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கே நன்மை விளைந்தது.

இக்காரணங்களிற் பல, இலங்கையின் வர்த்தகமாற்று விகிதத்திற்கான எதிர்கால வாய்ப்புகளுடன் தொடர்புடையனவாகும். இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் அடித்தளமாக விளங்கும் இத்தனிப்பட்ட பொருட்கள், வெளிநாட்டுச் சந்தைக் கேள்வியின் மெதுவளர்ச்சியினாலோ, அன்றிப் பதிலீட்டுச் செயற்கைப் பொருட்களின் தோற்றத்தினாலோ ஏற்பட்ட சக்திகளிற்கு உட்பட்டுள்ளன. அங்ஙனம் தெங்குப் பொருட்களும், இரப்பரும் செயற்கைப் பதிலீட்டுப் பொருட்களினது அல்லது மற்றைய மாற்றுப் பொருட்களினது போட்டி அழுக்கத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது. தேயிலையின் உலக வியாபாரத்தைப் பொறுத்தமட்டில், அது, அதனை மிகுதியாக இறக்குமதி செய்யும் செல்வம் படைத்த நாடுகளில், குறிப்பாக ஐக்கிய இராச்சியத்தில், இப்பொருளிற்கிருக்கும் குறைந்த வருமானக் கேள்வி நெகிழ்ச்சியாலும், பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், மத்திய கிழக்கு நாடுகளில் கொடுப்பனவுப் பிரச்சனைகளைத் தொடர்ந்து, இச்சந்தைகளில் இறக்குமதி மட்டுப்படுத்தல்கள் விதிக்கப்பட்டன. இவ்வித காரணங்களும் தேயிலையின் உலக வர்த்தகத்தைப் பாதித்தன. மேலும், ஓரளவில் புதிய பிரதேசங்களில் தேயிலை உற்பத்தி தொடங்கியமையால், அதிகரித்த வேறிடங்களின் தேயிலை உற்பத்தியும், பொதுப்படையான சந்தை நிலையை, இன்னும் மோசமாக்கியது.

இலங்கை தனது பிரதான ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பு முயற்சிகளைத் தொடர்ந்து கைப்பிடிப்பது மட்டுமன்றி, மேலும் அவற்றைத் தீவிரமுடன் கையாளவேண்டுவதுமவசியம். ஆனால் இவ்வேற்றுமதிப் பயிர்களை மாற்று நடுவதற்கும், சீரமைப்பதற்குமான நேரச் செலவையும், அவற்றினது பாதகமான விலைப் போக்குகளையும் நோக்குமிடத்து, இலங்கை பெருந் தோட்டத் துறையில் மட்டும், தனது வெளிநாட்டு வருவாயைத் தனது அவசர இறக்குமதித் தேவைகளைக் கொள்வனவு செய்யும் நோக்கத்துடன் அதிகரிக்கத் தங்கியிருப்பது அவ்வளவு உகந்ததல்ல. இரப்பரைப் பொறுத்த மட்டில், உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காகக் கூடிய விளைதிறன் மரங்களை மாற்று நடுவது உற்பத்தியை அதிகரிக்கும். ஆனால் இவ்வித உற்பத்தி அதிகரிப்பு, மொத்த ஏற்றுமதி வருவாயைக் குறிப்பிடத்தக்களவில் உயர்த்த உதவுவதிலும் பார்க்க, வீழ்ச்சியடைந்து கொண்டு போகும் உலக விலைகளின் ஒரு சூழ்நிலையில், பிழைத்து வாழ்வதற்கு அவசியமான நிபந்தனையொன்றாகிவிடும். மறு சொற்களில், இங்ஙனம் உற்பத்தித் திறன் அதிகரிப்புகளாலான நன்மைகளைச் சிறப்பாக, வெளிநாட்டு நுகர்வோர்களே குறைந்த விலைகள் மூலம் அனுபவிப்பார்கள்.

தேயிலையைப் பொறுத்த வரையில் உலக உற்பத்தி அதிகரிப்பு, நுகர்ச்சி அதிகரிப்பிலும் பார்க்க மிகக் கூடிய வீதத்தில் ஏற்பட்டுக் கொண்டு போகின்றது. ஆகவே ஒரு சர்வதேச உடன்படிக்கை ஏதாவது வரையப்படின் அன்றி, விலைகளிற் பாதகமான விளைவுகள் ஏற்படலாம். கூடிய விளைதிறன் கொண்ட ரகங்களின் பயிர்ச் செய்கையின் நிமித்தமும், புதுப் பிரதேசங்களில் அல்லது நாடுகளில் ஏற்

பட்ட உற்பத்தி விரிவின் நிமித்தமும், இவ்வகை ஒரு உடன்படிக்கையின் அவசியம் அதிகரிக்கலாம். தேயிலே உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கு வேண்டிய ஆற்றலே இலங்கை கொண்டுள்ளது. கடந்த பத்து வருடங்களில் தேயிலே உற்பத்தி அதிகரித்தமை, பெரும்பாலும் அதிகரித்த முறையில் உரங்களேப் பாவித்தமையினுலேயாகும். இவ்வழி மூலம் ஏற்படக்கூடிய உற்பத்தி அதிகரிப்புகளின் இறுதிக் கட்டம், பொதுவாக அடையப்பட்டு விட்டதா இல்லையா என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது. எனினும், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்ட அதிகரித்த விளேவைத் தரும் செடி ரகங்களின் மாற்று நடுதல் முறை, உற்பத்தியில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பை உண்டாக்கவல்ல ஆற்றலுடையது எனத் திடமாகக் கூறலாம். இம் முயற்சியினுல் இலங்கையின் ஏற்றுமதி வருமானமும் சமமான நன்மையடையுமோ என்பது, இதற்கிணேயான செய்கையாக சர்வதேச அடிப்படையில், இப்பொருளின் உலக வர்த்தகத்தைப் பலப்படுத்துவதிலும், ஸ்திரப்படுத்துவதிலும் தங்கியிருக்கின்றது. 1964ம் ஆண்டு, வர்த்தகமும் அபிவிருத்தியும் என்னும் பொருள்பற்றி ஐக்கிய நாட்டு மகாநாடொன்று ஜெனீவாவில் நடைபெற்றது. இங்கு ஆராயப்பட்ட முக்கிய விடயங்களில் ஒன்று, கடந்த 10 வருட காலமாக விளேமுதற் பொருட்களின் உலக வர்த்தகத்தைப் பொறுத்தவரையில் இயங்கிய தொடர்ச்சியான பாதகப் போக்குகளின் நீடிப்பினுல் மேலேற்படக்கூடிய விளேவும், அதற்கு எதிராக அவசரமாகச் சர்வதேச அடிப்படையில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கையும் பற்றியதாகும். இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களின், அதாவது தேயிலே, இரப்பர், தெங்குப் பொருள் பற்றிய பிரச்சினேகள், இதை நன்கு விளக்கிக் காட்டுவதுடன், வர்த்தக மாற்று விகிதத்தின் நீண்டகால வீழ்ச்சிகளினுல் அல்லற்படும் அபிவிருத்தியடையும் நாடுகளுக்குப் பண்டத்துறையில் சர்வதேச நோக்குடன் வழிமுறைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தையும், அல்லது சர்வதேச நட்டஈட்டு நிதி உதவித் திட்டங்களின் அவசியத்தையும், வற்புறுத்திக் காட்டுகின்றன.

இலங்கையின் எதிர்கால ஏற்றுமதி வருமானம், தற்பொழுது ஏற்றுமதி செய்யப்படும் தேயிலே, இரப்பர், தெங்குப் பொருட்களினதும், வேறு சிறிய விவசாயப் பொருட்களினதும், விற்பனவு வருமானத்திலுமே தங்கியிருக்கத் தேவையில்லே. வருங்காலத்தில், கைத்தொழிற் பொருட்களே வெளிநாடுகளில் விற்பனவு செய்தும், இலங்கை தனது வெளிநாட்டு வருமானத்தை அதிகரிக்கலாம். உண்மையில் இலங்கையின் கைத்தொழிற் துறையிலே நிலவும் வரையறைகள் காரணமாக ஏற்றுமதி செய்யும் ஆற்றலே உண்டுபண்ணுவது, பெருந் திட்டக் கைத்தொழிலபிவிருத்திக்கு நீண்டகால முறையில் வெளிநாட்டுக் கொடுப்பனவுப் பிரச்சினேயைத் தீர்ப்பதற்கும் அவசியமானதொன்ருகும். மிக அண்மைக் காலத்தில், இலங்கை இறக்குமதித் தட்டுப்பாடுகளின் தூண்டுகோலினுல் உள்நாட்டுச் சந்தைக்குத் தேவையான பல புதிய கைத்தொழில் தொழிற்பாடுகளே நிறுவியது. ஆனுல் இலங்கை தனது முழு அளவு இறக்குமதித் தேவைகளேயும் கொள்வனவு செய்யும் நோக்கத்துடன் விளேமுதற் பொருட்களின் மூலம் பெறும் ஏற்றுமதி வருமானத்தைக் கைத்தொழிலிலும், ஏற்றுமதி ஆற்றலே வளர்த்து அதிகரிப்பதாயின் சிறிது காலம் தாமதிக்க வேண்டியது இயற்கையே. பெருமளவில் கைத்தொழிற் பொருட்களே ஏற்றுமதி செய்தல், ஆசியாவின் பிரதேசக் கூட்டுறவு ஒழுங்குகளிலும் தங்கியிருக்கலாம். இவ்வொழுங்குகள், இக்கைத்தொழிற் பொருட்கள், பிரதேச சந்தைகளுக்குள் நுழைவதற்கு உதவியாயிருக்கும். மேலும், பெருமளவில் இலங்கையில் கைத்தொழில் ஆற்றலே உருவாக்குவதற்குக் கூடிய இயந்திரம், சாதனம், மூலப்பொருட்கள் ஆகியனவற்றை இறக்குமதி செய்தல் அவசியம். ஆகவே, இவ்விடைக் காலத்தில், வெளிநாட்டுக் கொடுப்பனவுப் பிரச்சினேகளுக்கு ஒரு தீர்வு காணவேண்டியிருக்கின்றது. பெருமளவில் கைத்தொழிற் பொருட்களே ஏற்றுமதி செய்யும் குறிக்கோள் ஒப்பியல்பாக ஒரு நீண்ட கால முயற்சியெனினும், ஏற்றுமதியை இயலுமானளவு மிக விரைவாக

ஊக்குவிக்கத் தொடங்குதல் அவசியமாகும். இப்புதுக் கைத்தொழில்களது ஸ்தாபிதம், உதாரணமாக ஆரம்பத்தில் உள்நாட்டுச் சந்தைகளின் அடிப்படையில் ஏற்படினும், பிற்காலத்தில் அவற்றினது ஏற்றுமதி செய்வதற்குரிய ஆற்றல் வசதிகள் பற்றியும் அதே நேரத்தில் கவனஞ் செலுத்துதல் அவசியமாகும்.

## (ஆ) இறக்குமதிப் பதிலீடு

நீண்ட கால வாய்ப்புக்கள் எவ்விதம் அமையினும், இலங்கை தனது வெளிநாட்டுக் கொடுப்பனவுகளின் இடர்ப்பாடுகளுக்கும், ஏற்றுமதி வருமானங்களை அதிகரிப்பதன் மூலம் மட்டுமே அத்தியாவசியமான இறக்குமதிப் பொருட்களின் வரத்தைக் கூட்டுவதற்கான பிரச்சனைக்கும், ஒரு தீர்வைக், குறுகிய காலத்திற்குள் காண முடியாதெனப் புலப்படுகின்றது. எனவே, இத்தகைய ஒரு தீர்வுக்கு உதவக் கூடிய ஏனைய வழி முறைகளைக் கையாளுவதும் அவசியமாகும். இறக்குமதிப் பதிலீடு, இவ்வழி முறைகளில் இரண்டாவதாக விளங்குகின்றது. இலங்கை தனது வெளிநாட்டு இருப்புகளை அது ஏற்கனவே செய்துள்ளபடி அவசியமற்ற பொருட்களினதும் போகப் பொருட்களினதும் இறக்குமதிகளைக் குறைப்பதனுல் மட்டுமன்றி, இறக்குமதிப் பொருட்களுக்கும் பதிலாக உள்நாட்டில் இறக்குமதிப் பதிலீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்வதனுலும், சிக்கனமாகப் பராமரித்தல் இயலும். முன்பு கூறியுள்ளபடியே, இறக்குமதிகள் மீதான மட்டுப்படுத்தல்களின் விளைவாக, பல உள்நாட்டுக் கைத்தொழில்கள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன. தயாரிப்புக் கைத்தொழிற் துறையிலே இலங்கை போன்ற ஒரு நாட்டுக்கு, இறக்குமதிப் பதிலீடுகளின் மூலமாக அந்நிய செலாவணியைச் சேமிப்பதற்றுக் கடுமையான வரையறைகள் உள்ளன என்பது நன்கு கருத்திற் கொள்ள வேண்டிய தொன்றுகும். முதன்மையாக, கைத்தொழில் ஆற்றலை உருவாக்குவதற்கு, பொறிகளையும் துணைக் கருவிகளையும் மட்டுமன்றி, மூலப் பொருட்களையும் ஏனைய நடுத்தரமான உற்பத்திப் பொருட்களையும் இறக்குமதி செய்தல் அவசியமாகும். இதனுல் உள்நாட்டு மூலப் பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழில்களுக்கு முதன்மையான இடம் கொடுப்பது அவசியமாகும். எனினும், இவ்வடிப்படையில் குறிப்பாக உள்நாட்டு மூலப்பொருள் வளங்களின் அளவும் வகைகளும் விளங்கிக் கொள்ளக்கூடியதாகக் குறைந்து விளங்கும், ஒரு சிறிய நாட்டினுல் ஒரு பெருமளவுக் கைத்தொழில் வளர்ச்சிக்கு ஊட்டமளிப்பது கடினமாகும். ஆகவே, உள்நாட்டுத் தயாரிப்பின் உற்பத்தி ஓர் உயர்ந்த இறக்குமதி உள்ளடக்கத்தை உடையதாகக் காணப்படின் வியப்படைய வேண்டியதில்லை.

மேலும் இக்காரணத்தினுல் சிறப்பாக ஆரம்ப நிலைகளிலே, இறக்குமதிப் பதிலீடு மூலமாக ஏற்படும் நிகர அந்நிய செலாவணிச் சேமிப்பு சிறியதாக இருப்பினும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்நிய செலாவணிச் சேமிப்பு வல்லமையை கைத்தொழில் முக்கியத்துவங்களை நிர்ணயிக்கும் உரைகற்களுள் ஒன்றுகப் பாவித்தல் சரியானதெனினும், அதனைக் கைத்தொழில் வளர்ச்சியை ஒரேயடியாகப் பங்கப்படுத்தும் அளவுக்குக் கையாளுவது இயைபற்றதாகும். மேலும், ஆரம்பத்திலே உள்நாட்டுச் சந்தைக்காக உற்பத்தி செய்யும், அந்நிய செலாவணிச் சேமிப்பு வல்லமையை மிகக் குறைவாக உடைய ஒரு கைத்தொழில், இறுதிக் கட்டங்களிலே அதன் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகள் மூலமாக அந்நிய செலாவணிகளைப் பெறும் ஆற்றலையும் கொண்டிருக்கலாம். உண்மையில் கைத்தொழில் உருவாக்கத்திற்கு இறக்குமதிப் பதிலீடே ஒரேயொரு அடிப்படையாக அமையும் போது, கைத்தொழில்களில் சிக்கனமற்ற அல்லது உயர்ந்த செலவு அமைப்பு தாபிக்கப்படக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.

கைத்தொழிற் தயாரிப்புத் துறையிலே கையாளப்படும் இறக்குமதிப் பதிலீட்டு முறைகள், இலங்கையின் வெளிநாட்டுக் கொடுப்பனவுப் பிரச்சனையைத் தீர்க்கக் கணிசமான அளவுக்கு உதவ முடியாது என்றே கருத வேண்டியுள்ளது. ஆனுல், விவசாயத் துறையின் நிலைமை வேறு. இலங்கை பெரும்பான்மையாக முதன்மைப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடாக விளங்கினும், அதன் இறக்குமதிகளுள் ஒரு பெரிய விகித சமமும், முதன்மைப் பொருட்களையே கொண்டுள்ளது. இலங்கையினது

பொருளாதாரத்தின் படிப்படியான வளர்ச்சியின் விளைவாக ஒரு சிறப்பியல்பு அமைப்பு ஏற்பட்டது. இதனால், இலங்கை தனது உணவுத் தேவைகளில் கணிசமான அளவை, வெளிநாடுகளிலிருந்து பெறுகிறது. இவ்வுணவுத் தேவைகள், இலங்கையின் அரிசித் தேவைகளின் அரைப்பங்கு மட்டுமன்றி, மீன், சீனி, பால், பாற்பொருட்கள், உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய், இவைபோன்ற ஏனைய பொருட்களின் தேவைகளிற் பெரும் பங்கினையும் உட்படுத்துகின்றன. இத்துறைகளிலேயே இறக்கு மதிப் பதிலீட்டு முறைகள் கணிசமான அந்நிய செலாவணிச் சேமிப்புகளைக் கொண்டு வரக் கூடியனவாகும். இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் மொத்தப் பெறுமானம், 1964ம் ஆண்டில் 10108 இலட்சம் ரூபாய்க ளாக விளங்கி, மொத்த இறக்குமதிச் செலவில் ஏறக்குறைய 51·2 சதவீதமாக அமைந்தது. அரிசி, சீனி, மீன், பாலும், பாற்தயாரிப்புப் பொருட்களும் ஆகியன வற்றின் இறக்குமதிகளது பெறுமானம், முறையே 3263 இலட்சம் ரூபாய்களாகவும், 1850 இலட்சம் ரூபாய்களாகவும், 685 இலட்சம் ரூபாய்களாகவும், 934 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கின. இத்துறைகளின் இறக்குமதிப் பதிலீடு கருதிச் செய்யப் படும் ஒருமித்த முயற்சி, பெரும் நன்மைகளை அளிப்பதும், அத்துடன் இலங்கையின் வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலையினைப் பலப்படுத்துவதற்கு ஒரு நம்பிக்கையூட்டும் வழியாக இருப்பதும் புலப்படுகின்றது. விவசாயத்துறையிலே இறக்குமதிப் பதிலீட்டுக் குறிக்கோளை முன்னிட்டுச் செய்யப்படும் துரித முயற்சி, கைத்தொழில் மய ஆக்கமாகிய இலட்சியத்துடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளமை, கவனிக்கத்தக்கது. விவசாயத்துறையில் கையாளப்படும் இறக்குமதிப் பதிலீட்டு முறைகள், விவசாயப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் அந்நிய செலாவணி வருவாய்களை மீதப்படுத்தி, அவற்றைக் கைத்தொழிலுக்கான பொறிகளையும், துணைக் கருவிகளையும், மூலப் பொருட்களையும் கொள்வனவு செய் வதற்கு உதவியாய் இருக்கும். இலங்கையின் விரைவான பொருளாதார வளர்ச் சிக்குத் தேவைப்படும் இறக்குமதிகளைப் பெறுவதற்கு ஒரு முக்கிய வழி இது என்பது தெளிவு.

விவசாயத்துறையிலே (ஒரு சில பயிர்களைத் தவிர்த்து) கையாளப்படும் இறக்கு மதிப் பதிலீடானது, மிகக் குறுகிய காலத்திற்குள் அடைந்துவிடக் கூடிய ஒரு குறிக்கோள் அல்ல. அத்துறையிலே தொழின் முறைப் பிரச்சனைகளை எதிர்நோக்க வும், வெற்றி கொள்ளவும் வேண்டியிருக்கும். மேலும் விவசாயத் துறையிலே மாற்றத்தையும், அத்துறையிலே விரைந்த முன்னேற்றத்தையும், கைத்தொழிலில் விரிவை ஏற்படுத்துவதைப்போல விரைவாக அடைவது, அநேகமாகச் சுலபமான தல்ல என்பது உணரற்பாலது. இது ஏனெனில், சமூகப் பொருளாதாரச் சிக்கல்கள் போன்ற சிக்கலான பிரச்சனைகள் விவசாயத் துறையில் அடங்கியுள்ளபடியினாலேயே ஆகும். பெருந் தோட்டத்தைத் தவிர்த்த விவசாயத்துறை, மரபு வழிவந்த நிறுவக அமைப்புகளையும், உற்பத்தி முறைகளையும் கொண்டு விளங்குகின்றமை யினால், அதனை நவீன உயர்ந்த உற்பத்தி வழிமுறைகளைக் கொண்டதாக மாற்றிய மைப்பதற்குத் தளராத விடாமுயற்சி தேவையாகும். ஒரு "விவசாயநாடு" கைத் தொழிலைவிட அவசியமாக விவசாயத்திலேயே மிக விரைந்த முன்னேற்றத்தை அடைவது எளிது எனக் கொள்வது தவறான பொதுக் கருத்தாகும். மேலும், உள்நாட்டு விவசாயத்துறையில் அபிவிருத்திக்கான தீவிரத்திட்டம், காணி அபி விருத்தி, நீர்ப்பாசனம் போன்ற முதலீட்டுச் செலவுகளைக் கொண்டுள்ளதாக இருக்கும். இவையும் கூட உயர்ந்த இறக்குமதி உள்ளடக்கத்தைப் பெறுவனவாக அமையலாம். எனவே, இத்தகைய ஒரு தீவிர திட்டத்தைக் கையாளுவதற்கான இலங்கையின் ஆற்றல், அதன் அந்நிய செலாவணிச் சாதனங்கள் போதிய அளவிற் கிடைப்பதிலேயே தங்கியுள்ளது.

## (இ) வெளிநாட்டு மூலதனம்

மேலே கூறியவற்றில் இருந்து தெளிவாவது யாதெனில், விவசாயத்துறையில் கைத்தொழில் ஏற்றுமதிகள் உட்பட ஏற்றுமதிகளின் அதிகரிப்பினுலும், இறக்குமதிப் பதிலீட்டு முயற்சியில் தீவிரமாக ஈடுபடுவதினுலும், இலங்கையின் சென்மதி நிலுவையின் நிலையைப் பலப்படுத்தவும், அதன் வருங்கால இறக்குமதி ஆற்றலையும் பெருமளவு உயர்த்தவும், முடியுமென்பதே. ஆயினும் இவ்வழிமுறைகள் மத்திய நீண்ட காலத் தீர்வைகளாகவே அமைய முடியும். இதற்கிடையில் எதிர்பாராத முறையில் வர்த்தக மாற்று விகிதத்தில் திருத்தம் ஏற்பட்டாலன்றி இடைக்காலத்தில் மிக நெருக்கடியான வெளிநாட்டுக் கொடுப்பனவுப் பிரச்சனையை இலங்கை அனுபவிக்க வேண்டி நேரிடும். இவற்றை யாம் வேறு வழிகளில் வெற்றிகாணுவிட்டால், இவை, எம் நீண்டகால வாய்ப்பைப் பாதிப்பதோடு மட்டுமன்றி, நடைமுறையில் இருக்கும் பொருளாதாரச் செயல் முயற்சி நிலைகளையும் பாதிக்கமுடியும்.

இடைக்காலப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு, முக்கியமாக, இலங்கை தனது வெளிநாட்டுக் கொள்வனவு இடர்ப்பாடுகளை ஓர் அளவு தளர்த்துவதற்கும், துரித அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் ஏற்கத்தக்க வழிகளுள் மூன்ருவதாய் உள்ள வழியை மேற்கொண்டு நன்மையை, அதாவது வெளிநாட்டு மூலதனத்தைப், பெறுதல் வேண்டும். இந்த நோக்கு வெளிநாட்டு மூலதன வருவாயினது உள்ளோட்டத்தின் பெருக்கத்தையே கருத்தில் கொண்டுள்ளது. குறைந்தளவு இறக்குமதித் தேவைகளுக்கும், பெறத்தக்க ஏற்றுமதி வருவாய்க்குமிடையில் உள்ள இடைவெளியானது, வளர்ச்சி பெற்றுவரும் எல்லா நாடுகளுக்கும் ஒரு பொதுப்பண்பாய் இக்காலத்தில் அமைந்துள்ளது. உலகிற்கு முதல் விளைவுப் பொருட்களின் கேள்வி வேண்டிய அளவில் கூடுவதென எதிர்பார்க்க முடியாததினுலும், செயல் முறையில் கொண்டு வரத்தக்க இறக்குமதிப் பதிலீட்டின் அளவிற்கு வரையறைகள் உண்டென்பதினுலும், தவிர்க்க முடியாத முறையில், விரைந்து அபிவிருத்தி பெற முயலும் நாடுகளில் ஏற்படக்கூடிய கொடுப்பனவு இடைவெளியை நிரப்புவதற்குப் பெருமளவு மூலதனத்தின் உள்ளோட்டம் தேவைப்படுகிறது. அண்மைக்காலத்தில் கைத்தொழில் விருத்தியடைந்த மேற்கத்திய நாடுகளிலிருந்தும், பொதுவுடமை நாடுகளில் இருந்தும், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்குக் குறிப்பிடத்தக்க பெருமளவு மூலதனம் வந்துள்ளது.

இந்த உள்ளோட்டம், தனியார் மூலதனத்தின் நேரடி முதலீடாய் இராது, பெருமளவு உத்தியோகபூர்வமான மூலதன இயக்கங்களாய், அதாவது கடன் முதலியவைகளால், அமைந்துள்ளது கவனிக்கத்தக்கது. இக்கடன்கள் இருபுடை, பல்புடை வழிகள் வாயிலாக அமைந்துள்ளன. ஏற்றுமதியில் ஏற்பட்ட வளர்ச்சி குறைவாக இருந்ததினுலும், வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினுலும் ஏற்பட்ட வெளிநாட்டு வருவாயின் குறைபாட்டை ஓர் அளவு நிறைவு செய்ய இவை துணைபுரிந்தன. ஆனுல் ஏற்றுமதி வருவாய்களுக்கும், இறக்குமதித் தேவைக்கும் உள்ள இடைவெளியை நிரப்பி பொருளாதார வளர்ச்சியை கூட்டுவதாயின், இவற்றின் தொகை பெருமளவு கூடவேண்டும்.

அண்மைக் காலத்தில் இலங்கையும் மூலதன உதவியைப் பெற்றிருக்கிறது. ஆனுல் அபிவிருத்தி அடையும் நாடுகளை ஒரு குழுவாகவும், ஆசிய நாடுகளை முழுமையாகவும் எடுத்து ஆராயும்போதும், அத்தோடு இலங்கையின் நேரடி அயல் நாடுகள் சிலவற்றுடன் ஒப்பிடும் போதும், நம் நாடு பெற்ற வெளிநாட்டு உதவி குறைந்தே காணப்படுகிறது. 1960ல் மூலதனத்தின் உள்ளோட்டம் அபிவிருத்தி அடையும்

நாடுகளின் 25 சதவீத இறக்குமதிகளுக்கும் ஆசிய நாடுகளின் 22 சதவீத இறக்குமதிகளுக்கும் நிதி ஈட்டம் செய்திருக்கையில், இலங்கையின் இறக்குமதிகளுக்கு 1960-64 கால எல்லேயுள் அது உதவிய தொகை சராசரி 4·2 சதவீதமாகவே அமைந்திருந்தது.[1] ஏனைய அபிவிருத்தி அடையும் நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் தேசிய வருமானத்தில் இறக்குமதிகள் பெருமளவு விகிதாச்சாரத்தை ஆட்கொள்கிறது என்பது உண்மையே.

அட்டவணை I—2

## மூலதன உள்ளோட்டமும் வர்த்தக மாற்று விகிதத்தில் மாற்றங்களும்

| | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | கூட்டுத் தொகை 1960–64 |
|---|---|---|---|---|---|---|
| தேசிய மூலதன உள்ளோட்டம் .. | 19·5 | 114·7 | 92·0 | 135·5 | 85·2 | 446·9 |
| வர்த்தக மாற்றுவீதவாயிலாக ஏற்பட்ட இலாபங்கள் அல்லது நட்டங்கள். (1958 ஆண்டு விலைகளில்) .. | + 22 3 | —112·1 | —38·0 | —207·3 | —268·9 | —604·0 |

ஆயினும், இலங்கைக்கு வரும் மூலதனத்தை அதனின் தேசிய வருவாயினதும் மொத்த முதலீட்டினதும் அளவாக எடுத்து நோக்கி, அவ்விகிதாச்சாரத்தை ஏனைய அபிவிருத்தியடையும் நாடுகளில் அமையும் விகிதாச்சாரங்களோடு ஒப்பிடுகையில் கூட, அது பாதகமாகவே அமைந்திருப்பது தெரியவருகிறது. அத்தோடு, இலங்கை பெருமளவிற்கு வேறு வழியற்று இறக்குமதியில் தற்போது தங்கியிருக்கும் காரணத்தால், இந்நாட்டின் ஆகக் குறைந்தளவு இறக்குமதித் தேவைகளுக்கும், ஏற்றுமதி வருவாய்களுக்குமிடையில் உள்ள இடைவெளியை நிரப்புவதற்கு, மூலதனத்தின் உள்ளோட்டம் இரட்டிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. உண்மையில் மூலதன வருயாய் மூலம் அண்மைக் காலத்தில் இலங்கை பெற்ற தொகை அளித்த நன்மைக்கு மேலாக அதனின் வர்த்தக மாற்று வீதத்தின் வீழ்ச்சி தோற்றுவித்த நட்டங்கள், அமைந்துள்ளன. இதனே, மூலதனத்தின் உள்ளோட்டத்துடன், 1958ம் ஆண்டின் விலைகளின் அடிப்படையில் வர்த்தக மாற்று விகிதத்திஞல் ஏற்படும் நய நட்டத்தை ஒப்பிட்டுக் காட்டும் விதத்தில் அமைந்துள்ள, மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணே, சித்தரிப்பதாகும்.

1. கீழ்க்காணும் அட்டவணே 1951—1962 எல்லேயினது. இது, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை முதலிய நாடுகளின் இறக்குமதிக்கு நிதியீட்டிய நிலேயை ஒப்பிடுகிறது.

## இறக்குமதிக்கு நிதி ஈட்டல் 1951 – 62

(சேவைகளினதும் பொருட்களினதும் இறக்குமதி மொத்தம் = 100)

| | பொருட்களினதும் சேவைகளினதும் ஏற்றுமதி | மூலதன உள்ளோட்டம் | | | வெளிநாட்டு இருப்பு குறைக்கப்படல் (1) | தவறுகளும் விடுபட்டனவைகளும் |
|---|---|---|---|---|---|---|
| | | தனியார் | அரசாங்கம் | மொத்தம் | | |
| இந்தியா | | | | | | |
| 1951—56 | 89·6 | 3·0 | 3·9 | 6·9 | 5·3 | —1·8 |
| 1957—62 | 66·4 | 5·9 | 21·7 | 27·5 | 7·6 | —1·5 |
| பாகிஸ்தான் | | | | | | |
| 1951—56 | 88·4 | 0·2 | 12·0 | 12·2 | —0·1 | —0·5 |
| 1957—62 | 69·2 | 1·9 | 28·9 | 30·8 | 0·3 | —0·3 |
| இலங்கை | | | | | | |
| 1951—56 | 105·7 | —6·0 | 1·0 | — 4·9 | —1·3 | 0·6 |
| 1957—62 | 92·5 | —2·6 | 3·7 | 1·0 | 3·4 | 0·1 |

மூலம்: ஆசியாவினதும் தூரகிழக்கு நாடுகளினதும் பொருளாதாரக் குழுவின் அளவை 1963, பக்கம் 12

(1) சய அடையாளம் வெளிநாட்டு இருப்பின் அதிகரிப்பைக் காட்டுகிறது.

வர்த்தக மாற்றத்தின் நய நட்டக் கணிப்புகள் அடிப்படை ஆண்டின் தேர்வுக்கிணங்க மாறுபடுவது இயற்கையே. ஆராய்விற்கு என்று மேலே தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை ஆண்டு, ஏற்றுமதி விலைகளைப் பொறுத்தவரை மிக உச்சநிலையில் இருந்ததென்றோ, அல்லது இறக்குமதி விலைகளைப் பொறுத்தமட்டில் குறிப்பிடத்தக்களவு குறைவாக இருந்ததென்றோ, கருத இடமில்லை. 1950—அல்லது 1955ஐ அடிப்படை ஆண்டாக வைத்து வர்த்தக மாற்று விகிதத்தின் விளைவைக் கவனிப்போமாயின், இலங்கை அடைந்த நட்டம், மேற்குறித்ததிலும் பார்க்க மிகக்கூடியதாகவே இருந்திருக்கும்.

உடனடியாகத் தொடரும் ஆண்டுகளில், அதிகரித்த உள்ளோட்ட மூலதன வருவாய் தான் இலங்கையின் இறக்குமதி ஆற்றலிற்கு ஆரம்ப காலத்தில் துணை செய்யத்தக்க முக்கிய வழியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இது, இலங்கை விவசாயத் துறையிலும் கைத்தொழிற் துறையிலும் விரைவான அபிவிருத்தி காணுவதற்கும், இறுதியில் தனது சென்மதி நிலுவை நிலையை வலிவுபடுத்துவதற்கும், வெளிநாட்டு உதவியில் தங்கும் நிலையைக் குறைப்பதற்கும், துணைசெய்யும். இலங்கையின் தேவை "திட்ட உதவி" மட்டுமல்ல. இப்போது உடனடியாக எல்லாவற்றிற்கும் மேலாகத் தேவையானது என்னவெனில், போதியளவு மூலப் பொருட்களினதும் முதலீட்டுச் சாதனத்தினதும் போதிய வரவை இலங்கை தாங்கக் கூடியதாக வேண்டும். இதன் மூலமே, பொதுவில், இலங்கையின் பொருளாதாரத் தொழில் முறை முயற்சி வேகத்தைத் தொடரவோ, அன்றிக் கூட்டவோ முடியும். இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி இடர்ப்பாடுகளும், அதனால் இறக்குமதியை ஒட்டிக் கையாள வேண்டிய கடும் தடைகளும், மூலப் பொருட்களிலும் மாற்றுறுப்புகளிலும் போதாமையை விளைவித்திருப்பது உண்மை. இது தோற்றம் பெறும் கைத்தொழிற் துறையின் இன்றைய கொள்ளளவு ஆற்றலை முழுக்கப் பயன்படுத்தமுடியாத நிலையை உருவாக்கியுள்ளது. "திட்ட உதவி" இலங்கையின் இடைக்கால, நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தத் துணைபுரியுமெனினும், கூடுதலான வெளிநாட்டு வருவாயும், இலங்கையின் வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலையை வலிவுபடுத்த, உதவியாய் இருக்கும். இதையொட்டி இங்கு ஒரு கருத்துத் தெரிவித்தல் நலம். அண்மையில் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் இத்தியாவுக்குப் பொருட்களையும் மாற்றுறுப்புகளையும் பெறுவதற்கு வெளிநாட்டுச் செலாவணியை அளித்து உதவிற்று. இது உதவிக் கொள்கைத் துறையில் ஒரு வரவேற்கத்தக்க நிகழ்ச்சியாகும்.

கூடுதலான வெளிநாட்டுச் சொத்துக்களின் உள்ளோட்டம் தேவையெனினும், இந்த சொத்துக்கள் வழங்கப்படும் நிபந்தனை அடிப்படைகளும் முக்கியமாம். காரணம், அளவு கடந்த சுமையாக இந்த நிபந்தனைகள் அமையக் கூடாதென்பதே. இவ்விடயத்தில் ஏனைய நாடுகளோடு ஒப்பிடுகையில், இலங்கை வாய்ப்பான நிலையில் இருக்கிறது. காரணம், ஏனைய நாடுகளுக்குக் கொடுக்கப்பட்ட அந்நிய கடன் மீதான சேவையும், கடனழிவுத் தொகையும் மிகப் பெருமளவாய் அமைந்து விட்டதனால், அவற்றின் வெளிநாட்டின் வருவாயில் பெரும்பகுதி, இவற்றைத் தீர்ப்பதிலேயே பயன்படுத்தப்படுகிறது. ஆனால், மிக நெருக்கடியான வெளிநாட்டுச் செலாவணிப் போதாமை ஏற்படின், இலங்கையும் கூட பெருமளவு நிரம்பல் செய்வோரின் கடன்களும், மற்றும் இன்னோரன்ன வெளிநாட்டுக் கடன்பாடுகளும் ஆகிய உசித வழிகளைக் கையாள நேரிடும். இவை அளவு கடந்த வட்டி இறுப்புப் போன்ற சேவைச் சுமைகளைத் தாங்கும் நிலையை ஏற்படுத்தும். ஏற்கத்தக்க ஏனைய வெளிநாட்டு உதவி முறைகள் இல்லாத நிலையில் இத்தகைய வழிகளைத் தவிர்க்க முடியாதெனினும், இவை வருங்காலத்தில் பெரும்பாலும் இந்நாட்டின் வெளிநாட்டுக் கொள்வனவு நிலையைத் திருத்துவதிலும் பார்க்க மோசமாக்கி விடக்கூடும்.

## (3) 1964ம் ஆண்டின் நிதி, நாணய விருத்திகள்

வெளிநாட்டு வருவாய் வளர்ச்சி வீதம் போதியளவு இல்லாத சூழ்நிலையில், முக்கியமாக அரசாங்க வரவு செலவுத் திட்டத்திலுள்ள மிதமிஞ்சிய பணக்குறையினால், கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் உள்நாட்டு நாணய விரிவு நடைபெற்றது என்று, மகா வங்கியின் முன்னைய அறிக்கைகள் எடுத்துக்காட்டியுள்ளன. இந்நாணய விரிவின் எதிர் விளைவுகள் இரு வகைப்பட்டன. ஆரம்பப் பருவத்தில் இறக்குமதிகள் ஒப்பியல்பாக இலகுவாக வந்து கொண்டிருக்கவியலுமாயிருக்கும் போது, இந்நாணய விரிவினாலேற்பட்ட கூடுதலான கேள்வி, இவ்விறக்குமதிப் பொருட்களின் அதிகரித்த நிரம்பல்களினால் திருப்திப்படுத்தப்பட்டது. இது பெருமளவு இறக்குமதிப் பொருட்களுக்குப் பிரதான நிதியீட்டும் சாதனமாகவிருந்த வெளிநாட்டுச் சொத்துக்களில் தீட்சணமான வீழ்ச்சியை உண்டுபண்ணியது. இக்

காலப் பகுதியில் உள்நாட்டு விலைமட்டமும் குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்படவில்லை. எனவே, வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சியை விட, இந்நாணய விரிவின் பாதக எதிர்விளைவுகளுக்கான நேரடிச் சான்றுகள் மிகக் குறைவு. வெளிநாட்டுச் சொத்துக்களின் விரைந்த வீழ்ச்சியுடன், இந்நாணய விரிவின் விளைவு, அதன் இரண்டாவது பருவத்தை அடைந்தது. இவ் வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தும் வண்ணம், இறக்குமதிகளின் மேல் நேரடிக் கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டியிருந்தது. இதன் பயனாக இறக்குமதிப் பொருட்களின் நிரம்பல் அளவு மிகவும் குறைந்தது. முதலில் அவ்வளவு அத்தியாவசிய மில்லாத நுகர்ச்சிப் பொருட்களில், இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மிகக் கடுமையாக விதிக்கப்பட்டன. ஆயினும் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கல்களில் தொடர்ந்து நீடித்த அமுக்கங்கள் காரணமாக, இறக்குமதி உத்தரவுச் சீட்டு முறையின் பரப்பைப் படிப்படியாக அதிகரிக்க வேண்டியிருந்தது. இறுதியில் இக்கட்டுப்பாட்டு முறை, பல ரகப்பட்ட இறக்குமதிச் செலவுகள் யாவற்றையும், செலாவணி ஒதுக்கல்களை வரையறுக்கும் ஒரு வரவு செலவுத் திட்ட அடிப்படையில் நிர்ணயிக்கும் அளவிற்கு, விரிவடைந்தது. அதே சமயம், போதியளவு அத்தியாவசியமான பொருட்களின் இறக்குமதியை நிலைக்கச் செய்ய இயலுமான முயற்சிகள் எடுக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, வெளிநாட்டு விலைகள் அதிகரித்த பொழுதும், நுகர்வோரின் தேவைகளைத் திருப்திப்படுத்தக் கூடிய நிலைகளில், அரசாங்கத்தின் உணவுப் பொருட்கள் இறக்குமதி, கைக்கொள்ளப்பட்டது. ஆனால், சென்மதி நிலுவை மேல் இயங்கிய தொடர்ச்சியான அமுக்கங்களின் விளைவாக இக் கட்டுப்பாடுகளின் தாக்கல்கள், மூல முதற் பொருட்கள் உட்படக் கூடுதலான பலதரப்பட்ட பொருட்களிலும் ஏற்படுதல் தவிர்க்க முடியாததொன்றாயிற்று.

தொடர்ந்து நடைபெறும் நாணய விரிவின் பின்னணியில் ஏற்பட்ட இறக்குமதிகளின் தீட்சணமான கட்டுப்பாடுகள், உள்நாட்டு விலைமட்டத்தில் கூடிய அமுக்கங்களை உண்டுபண்ணின. சிறிதுகாலம் முன்னரே இறக்குமதி செய்யப்பட்ட கையிருப்புகள் காரணமாக, இவ்வமுக்கங்களது தீவிரம் தரப்படுத்தப்பட்டது. ஆனால், இக் கையிருப்புகள் குறைந்து போகவே, இவ்விலை அதிகரிப்பின் தீவிரமும் தெரியக்கூடியதாயிருந்தது. மொத்த அல்லது சில்லரை விலைகளின் குறிகாட்டி போன்ற விலை மாற்றங்களின் கூட்டளவு இல்லாத விடத்துப், பொதுவிலைமட்ட ஏற்றத்தின் உண்மையான அளவை மதிப்பிட இயலாதிருக்கின்றது. தற்பொழுது கிடைக்கக் கூடிய ஒரேயொரு விலைமாற்றங்களின் குறிகாட்டி, கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியேயாகும். கடந்த இரண்டு மூன்று வருடங்களாக ஏற்பட்ட தெளிவான எழுச்சிப் போக்கை, இக்குறிகாட்டி காட்டுகின்றது. இவ்வெழுச்சிப் போக்கு, 1961ம் ஆண்டிற்குரிய 104·8 புள்ளிகளிலிருந்து, 62ம் ஆண்டில் 106·3 புள்ளிகளையும், 63ம் ஆண்டில் 108·8 புள்ளிகளையும், 64ம் ஆண்டில் 112·2 புள்ளிகளையும், பதிவு செய்துள்ளது. எனினும், மானியம் பெறும் பொருட்களும், விலைக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட பொருட்களும், ஒப்பியல்பிற் கூடிய முக்கியத்துவம் வகிக்கும் தொழிலாளர் வகுப்பு வீட்டு வரவு செலவுகளை அடிப்படையாகக் கொண்ட காரணமாக, இக் கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி குறுகிய பரப்புடையது. இவ் விலைக்குறிகாட்டியில் அடங்காத முக்கிய பொருள்களின் விலைத் தரவுகள், ஒப்பியல்பாக வேறு பல பொருட் தொகுப்புகளில் கூர்மையான விலையதிகரிப்புகளைத் தெரிவிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன. உண்மையில் கூடிய முக்கியத்துவமும், நீண்ட காலம் நிலைப்பதுமான நாணய விரிவு அமுக்கங்கள் உள்ள வேறு சில நாடுகளில் விலைமாற்றத்தின் வேகம் அடைந்த நிலையை, இலங்கை அடையவில்லை. ஆனால், முன்னைய வருடாந்த அறிக்கையில் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, பண வீக்கத்தை நேரத்துடன் தடுத்தாலல்லது, இம்முறை, நாட்டில் வலுவடையவும்,

நாளடைவில் திரண்டு நிலைநிற்கவும் வழிகோலும். உதாரணமாகப் பணவீக்கச் சூழ்நிலை, நிரம்பல்களைப் பிற்காலத்தில் வியாபாரஞ் செய்யும் நோக்குடன் பதுக்கி வைக்கத் தூண்டி விடுமாகையால், இம்முறை பொருட் தட்டுப் பாடுகளையும், விலை யேற்றங்களையும் மேலும் அதிகரித்துவிடும். மேலும், வாழ்க்கைச் செலவின் ஏற்றம், சம்பள அதிகரிப்புக்கான அழுக்கங்களை உண்டு பண்ணக்கூடும். எனினும், இத்தகைய சம்பள அதிகரிப்புகள், உற்பத்திவிளைவு அதிகரிப்பிற்கு ஏற்ப அமையாவிடின், விலை யேற்றத்தை மேலும் மோசமாக்குவதுடன் தன்னைத்தானே தோற்கடிக்கச் செய்யும் முயற்சியாகவும் அமைந்துவிடும். எடுத்துக்காட்டாக, இலங்கையைப் பொறுத்த வரையில் சம்பள அதிகரிப்பின் மூலம் உற்பத்திச் செலவில் அதிகரிப்புண்டாயின், அது, சென்மதி நிலுவை நிலையில் பாதகமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தவுங் கூடும். ஏற்றுமதிப் பகுதியில், விளைவுற்பத்திச் செலவதிகரிப்பை, வெளிநாட்டு நுகர்வோரிடமிருந்து அதிகரித்த விலைகள் மூலம் அறவிடமுடியாது. ஆகவே, இது எல்லை உற்பத்தியாளரின் உற்பத்தியைக் குறைக்கக்கூடும்.

உயர்ந்த மட்டத்தினை அடைந்திருக்கும் நாணயக் கேள்வியின் சந்தர்ப்பத்திலே நிரம்பல்கள் மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தினால், விலைகளின் மேல் ஏற்பட்ட பொதுவான அழுக்கத்தைவிட, இறக்குமதிகளின் மேல் கொண்டுவரப்படும் நிர்வாகக் கட்டுப்பாடுகளும், நிரம்பல்களிலும், விலைகளிலும், குறுகிய கால அல்லது ஒழுங்கற்ற ஏற்றவிறக்கங்களை விளைவிக்கக்கூடும். உத்தரவுச் சீட்டுகள் வழங்குவதிலும், பொருள் கொள்வதற்குப் பிறப்பிக்கப்படும் கட்டளைகளிலும், பொருட்களைக் கப்பலேற்றுவதிலும் ஏற்படக்கூடிய இடைவெளிகளின் கால காரணத்தினால், இறக்குமதிகளின் தங்கு தடையற்ற உள்வரவு பாதிக்கப்படலாம். இந்நிலையில், நிரம்பல்களின் வருகைக்குத் தகுந்தபடி, தனிப்பட்ட பொருட்களில் கடுமையான பொருட் தட்டுப்பாடுகளும், விலையேற்றங்களும் நேரத்திற்கு நேரம் தோன்றக்கூடும். நிரம்பல்களிலும், விலைகளிலும் ஏற்படும் இவ்வொழுங்கற்ற இயக்கங்கள், பொருளாதாரத் தொழிற்பாட்டில், குறிப்பாக மூலப் பொருட்களிலும், மற்றைய இடைப்பட்ட பொருட்களிலும், அத்துடன் மாற்றுறுப்புக்கள், இயந்திரங்கள், பலவித சாதனங்களிலும் குழப்ப விளைவுகளை ஏற்படுத்தவும் கூடும்.

ஓரளவிற்கு இறக்குமதி நிரம்பல்களின் குறைபாட்டை, அதிகரித்த உள்நாட்டு உற்பத்தியின் மூலம், ஈடு செய்ய முடியுமாயிருந்தது. இது, குறிப்பாகக் கைத்தொழில் உற்பத்தியைப் பொறுத்த வரையில் உண்மையாகும். அண்மை வருடங்களில் விதித்த இறக்குமதித் தடைகள், இறக்குமதிக் கைத்தொழிற் பொருட்களுக்குப் பதிலான பொருட்களின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்தன. ஆனால் அதிகரித்த உள்நாட்டு விளைவுற்பத்தி, பணவீக்க அழுக்கங்களைத் தடுப்பதற்கு மிகக் குறைவான அளவிலேயே நன்மை பயக்கக்கூடியதாயிருந்தது. காரணம், இறக்குமதி நிரம்பல்களின் குறைபாட்டையோ, அன்றிப் பணவிரிவின் தாக்கல்களையோ முழுதாக ஈடு செய்யும் அளவில் இறக்குமதிப் பதிலீட்டுப் பொருட்களின் உற்பத்திப்பரப்பு அமையாததே. 1963ம், 64ம் ஆண்டுகளில், இலங்கையின் பணநிரம்பல், உண்மை உள்நாட்டு உற்பத்தியிலும் பார்க்கக் குறிப்பிடத்தக்களவு விரைவான வீதத்தில் அதிகரித்தது.

இப்பிரச்சனைகள் இயங்கும் ஒரு சூழ்நிலையில், நாணய நிதிக் கொள்கையின் குறிக்கோள்களில் ஒன்றாக அமையவேண்டியது, ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, மொத்தக் கேள்விக்கும், மொத்த நிரம்பலுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன், நாணய விரிவைத் தடைப்படுத்துவதேயாகும். அரசாங்க வரவு செலவுத் திட்டத்திலுள்ள பணவீக்கத் தன்மை கொண்ட பணக்குறையும், வங்கி முறையினால் தனியார் துறைக்கென உண்டாக்கப்பட்ட கொடுகடனுமே, அண்மைக் காலங்களில் ஏற்பட்ட நாணய விரிவின் முக்கிய காரணிகளாகும்.

கீழே வரும் பிரிவுகளில், 1964ம் ஆண்டு நிதித் துறையிலும், நாணயத் துறையிலும் ஏற்பட்ட முக்கிய விருத்திகள், சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றினது விபரம் இந்த அறிக்கையின் இரண்டாவது பகுதியில் தரப்பட்டுள்து.

## (அ) அரசாங்க வரவு செலவுத் திட்டம்

1963ம் ஆண்டு வருடாந்த அறிக்கையில், 1960/61 தொடங்கி 1962/63 வரையிலான நிதியாண்டுகளில், அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் பணவீக்கத் தன்மை கொண்ட பணக்குறை, தொடர்ந்தும் அதிகமாகவிருந்த தெனினும், 1959/60ம் ஆண்டில் அது 2511 இலட்சம் ரூபாக்களாகவிருந்த உச்சநிலையுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, மிதமான வீழ்ச்சிப் போக்கை அடைந்துள்ளது என்பது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 1962/63ம் ஆண்டில் பணவீக்கத் தன்மை கொண்ட மொத்தப் பணக்குறை 1620 இலட்சம் ரூபாக்களாக வீழ்ச்சியடைந்துள்ளது. 1963/64ம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் மேலுங் குறைவான பணவீக்கத்தன்மை கொண்ட பணக்குறை எதிர்பார்க்கப்பட்டது. உண்மையில் இது, பணவிரிவு விளைவிக்கத்தக்க சாதனங்களிலிருந்து நிதியீட்டுவதற்கு எதிர்பார்த்த மொத்தத் தொகை 545 இலட்சம் ரூபாக்கள் மட்டுமேயாகும். எனினும், இறுதியில். இது எதிர்பார்த்தபடி அமையவில்லை. 1963/64ம் நிதியாண்டின் உண்மையான பணவீக்கத் தன்மை கொண்ட பணக்குறை 1629 இலட்சம் ரூபாக்களாக இருந்ததினால் முன்னைய ஆண்டுத் தொகையோடு இதனை ஒப்பிடுகையில் இவ்விரண்டிற்கும் இடையே அவ்வளவு வித்தியாசமில்லை.

மூல மதிப்பீடுகளுடன் ஒப்பிடும் பொழுது, அரசிறையிலும், வெளிநாட்டுதவியிலும் ஏற்பட்ட சிறு வீழ்ச்சிகளே இவ்வித்தியாசத்தில் ஓரளவிற்குக் காரணமாயின. 1963/64ம் ஆண்டு, 17876 இலட்சம் ரூபாய்கள் மதிப்பீட்டிற் கெதிராக, உண்மையான அரசிறை 17535 இலட்சம் ரூபாக்களாகவே இருந்தது. எனவே இது 341 இலட்சம் ரூபாக்களால் வீச்சியடைந்துள்ளது. மேலும் வெளிநாட்டுதவி வரவும் 1750 இலட்சம் ரூபா மதிப்பீட்டுடன் ஒப்பு நோக்கும் பொழுது, 986 இலட்சம் ரூபாக்களாக விளங்கியது. எனினும் 1963/64ம் ஆண்டில் பணவீக்கத் தன்மை கொண்ட மதிப்பிடப்பட்ட பணக்குறைக்கும், உண்மையான பணக்குறைக்குமுள்ள வித்தியாசத்தின் முக்கிய காரணம் உணவு மானியச் செலவின் ஏற்றமும், அதனாலேற்பட்ட நடைமுறைச் செலவுகளுமேயாகும்.

1963/64ம் ஆண்டின் மொத்த நடைமுறைச் செலவுகள் அரசாங்க வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிலும் 977 இலட்சம் ரூபாக்களால் அதிகரித்துள்ளன. எனினும், உணவு மானியச் செலவின் மேலதிகம் மட்டுமே 1025 இலட்சம் ரூபாக்களாக விளங்கியது. இவ்வளவு மானியச் செலவில் ஏற்பட்ட மேலதிகத்தின் முக்கிய காரணம் மதிப்பிடப்பட்ட விலையிலும், சீனியின் உலக விலை தீட்சணமாக அதிகரித்தமையேயாகும். சீனி அரசாங்கத்தினாலேயே இறக்குமதி செய்யப்பட்டு விற்கப்படுவதால், அதன் விற்பனையினால் வரும் இலாபம் அரிசியை மானிய விலையில் விற்பதின் நட்டத்தை ஓரளவாவது ஈடு செய்ய முடியுமாயிருந்தது மாற்றமுறாத உள்நாட்டு விற்பனவு விலைகளின் 1963/64ம் ஆண்டுப் பின்னணியில், இறக்குமதிப் பொருட்களின் கொள்வனவு விலையதிகரிப்பு, சீனி விற்பனையிலிருந்து எதிர்பார்த்தளவு இலாபத்தில் வீழ்ச்சியேற்படுவதற்குக் காரணமாயிற்று. ஆகவே, மதிப்பீடுகளை அமைக்கப் பயன்படுத்தப்பட்ட உலக விலைகளிலும் பார்க்க உண்மையாக உலக விலைகளில் ஏற்பட்ட மிகுதியான ஏற்றமே, அரசாங்க வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளிற்கும் 1963/64ம் ஆண்டின் பணவிரிவு நிதியீட்டம் சம்பந்தமான உண்மையான விளைவுகளுக்குமுள்ள வித்தியாசத்திற்குரிய முக்கிய காரணமென்பது தெளிவு. ஆயினும் அரசாங்க மூலதனச் செலவீடுகளில் குறிப்பிடத்தக்களவு சிறு வீழ்ச்சியேற்பட்டது. மூல மதிப்பீடுகளுடன் நோக்கும் பொழுது, உண்மையான செலவீடு 1361 இலட்சத்தால் குறைவுற்றது.

மேற்கூறிய ஆய்விலிருந்து, 1963/64ம் ஆண்டு உணவு மானியச் செலவு தீட்சணமாக அதிகரித்திருக்காவிடின் பணவீக்கத் தன்மை கொண்ட பணக்குறையளவில், அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில், முன்னைய நிதியாண்டிலும் நியாயமானளவு திருத்தம் தெரிந்திருக்குமென்பது வெளிப்படை. அரசாங்க அரசிறையின் தீட்சணமான அதிகரிப்பு, 1963/64ம் ஆண்டின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்றாகும். 1962/63ம் ஆண்டுக்குரிய 15934 இலட்சம் ரூபாக்களில் இருந்து, மொத்த அரசிறை 1963/64ம் ஆண்டு 17535 இலட்சம் ரூபாக்களாக அதிகரித்தது. இது 1601 இலட்சம்

ரூபாக்கள் கொண்டதும் ஒரு தனி வருடத்திற்கு மிகவும் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புமாகும். இறக்குமதிவரி சேர்த்தல், 838 இலட்சம் ரூபாக்களால் அதிகரித்தமை, அரசிறையின் ஏற்றத்திற்கு முக்கிய காரணமாகும்.

மேலும், ஆடை, சிறு தானியம், கோதுமை மாவிலும், அரசாங்க அரசிறைப் பகுப்பிலுள்ள "மற்றைய பொருட்கள்" என்ற பகுதிகளிலும் குறிப்பிடத்தக்களவு வரி சேர்த்தல் அதிகரிப்பு ஏற்பட்டது. மேலதிகக் கட்டணம் உட்பட, வருமான வரி மீதான வரவு 260 இலட்சம் ரூபாக்களால் அதிகரித்ததுடன், பொது விற்பனை, மொத்த விற்பனை வரி வரவுகளும் 159 இலட்சம் ரூபாக்களால் அதிகரித்துள்ளன. ஆனல், இவ்வதிகரிப்புகள் யாவும் இரப்பரின் ஏற்றுமதி வரி வரவினுலும் மண்ணெண்ணை மோட்டார் எண்ணெய் திரவத் தன்மை வாய்ந்த எரிபொருள், புகையிலை, சிகரெட்டினது இறக்குமதி வரி வரவினும், நிலவரி, முன்னரே நீக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வரி போன்ற வரிகளினுலும் ஏற்பட்ட வீழ்ச்சியினுல் ஓரளவே பாதிக்கப்பட்டன.

1962/63ம் ஆண்டு 15340 இலட்சம் ரூபாக்களைக் கொண்ட நடைமுறைச் செலவுகள் 1963/64ம் ஆண்டில் 17584 இலட்சம் ரூபாக்களாக விளங்கின. இது, 2244 இலட்சம் ரூபாக்கள் கொண்ட ஒரு அதிகரிப்பாகும். முன்னைய ஆண்டிலிருந்து உணவு மானியச் செலவு 1394 இலட்சம் ரூபாக்களால் அதிகரித்துள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, சீனியின் உலக விலையின் ஏற்றமே, இவ்வளவு மானியச் செலவதிகரிப்பின் முக்கிய காரணமாகும். முன்னையவாண்டுடன் ஒப்பிடும்போது, சீனியிலிருந்து பெறும் இலாபம், 795 இலட்சம் ரூபாக்களால் வீழ்ச்சியடைந்துள்ளது. குறிப்பாக, வெள்ளைச் சீனியின் இறக்குமதி விலையின் சராசரி ஏறக்குறைய இரு மடங்காகியது. இது 1962/63ம் ஆண்டு விலையாகிய ஒரு நீளத் தொன் 637 ரூபாக்களிலிருந்து 1963/64ம் ஆண்டு 1135 ரூபாக்களாக அதிகரித்தது. மேலும், மா விற்பனவிலிருந்து வரும் இலாபத்திலும் வீழ்ச்சியேற்பட்டது. இவ்விலாபம் 1962/63ம் ஆண்டு 470 இலட்சம் ரூபாக்களாக இருந்தது. 1963/64ம் ஆண்டில் ரூபா 260 இலட்சத்தால் வீழ்ச்சி அடைந்து, 10 இலட்சம் ரூபாக்களாக மட்டுமே இருந்தது ஒரு இருத்தல் மாவின் சில்லரை விற்பனை விலையின் 5 சதவீதத் குறைப்பையும் இறக்குமதி விலைகளின் ஏற்றத்தையும் இவ்வீழ்ச்சி பிரதிபலிக்கின்றது. வேறு விடயங்களின் நடைமுறைச் செலவிலும் நியாயமான அதிகரிப்புக்கள் காணப்பட்டன.

உதாரணமாக, 1963/64ம் ஆண்டுக் கல்வியின் மீதான செலவீடுகள் 234 இலட்சம் ரூபாக்களால் அதிகரித்ததுடன், இளைப்பாறற் சம்பளத்தினதும் பொதுக்கடன் மீதான வட்டியின் பேரிலுமான செலவீடுகள் 296 இலட்சம் ரூபாக்களால் அதிகரித்துள்ளன. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, 1963/64ம் ஆண்டில், மூலதனச் செலவு வாக்குப் பணங்களில் குறிப்பிடத்தக்களவு குறைச் செலவு ஏற்பட்ட பொழுதும், மூலதனச் செலவுகள் 1962/63ம் ஆண்டிலிருந்த 4890 இலட்சம் ரூபாக்களுக்கெதிராக, இவ்வாண்டில் 5033 இலட்சம் ரூபாக்களாக விளங்கின. அரசாங்க முகவர் நிலையங்களுக்கு 266 இலட்சம் ரூபாக்கள் கூடுதலாகக் கடன் வழங்கியமையும், நிதியிருப்புக்களைப் பெற்றமையுமே, முன்னைய ஆண்டிலும் இவ்வாண்டு, 143 இலட்சம் ரூபாக்களால் மூலதனச் செலவுகள் அதிகரித்தமைக்குக் காரணமாகும். நிலையிருப்புக்களின் ஆக்கம், பெறுதல், பேணுதல் ஆகியவற்றின் மூலதனச் செலவீடுகள் 1962/63ம் ஆண்டிற்கான 4791 இலட்சம் ரூபாக்களிலிருந்து, 1963/64ம் ஆண்டு 4668 இலட்சம் ரூபாக்களாக வீழ்ச்சியடைந்துள்ளன. இது 123 இலட்சம் ரூபாக்கள் கொண்ட வீழ்ச்சியாகும்.

1963/64ம் நிதியாண்டில், அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் மொத்தப் பணக்குறை, 5192 இலட்சம் ரூபாக்களாகும். ஆழ்நிதியின் உதவு தொகைகளுக்கேற்பச் சீராக்கப்பட்டபின், தேறிய பணக்குறை 4624 இலட்சம் ரூபாக்களாக விளங்கியது. 1962/63ம் ஆண்டில் தேறிய பணக்குறை 3917 இலட்சம் ரூபாக்களாகும். பின்வரும் அட்டவணை, 1963/64ம் ஆண்டிலும், அதற்கு முன்னைய வருடங்களிலும் பணக்குறைக்கு எவ்வகையில் நிதியீட்டப்பட்ட தென்பதை விளக்கிக் காட்டுகின்றது.

அட்டவணை 1—(3)

## குறைக்கு நிதியீட்டல் 1959/60 முதல் 1963/64 வரை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1959/60 | 1960/61 | 1961/62 | 1962/63 | 1963/64 |
|---|---|---|---|---|---|
| 1. வங்கிகளல்லாத மூலங்களிலிருந்து நிதியீட்டல் (மொத்தம்) .. .. .. | 170.5 | 212.2 | 269.7 | 213.2 | 301.8 |
| அதில், (அ) நிர்வாகக் கடன்பாடு .. .. | 57.4 | 29.4 | 104.5 | — 33.8 | — 1.1 |
| (ஆ) வங்கிகள் அல்லாத மூலங்களிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு .. | 86.5 | 165.2 | 109.4 | 153.5 | 206.1 |
| (இ) வெளிநாட்டுக் கடன்களும் நன்கொடைகளும் .. .. | 26.6 | 26.6 | 55.8 | 93.5 | 96.8 |
| 2. வங்கிகளிலிருந்து உள்நாட்டுக் கடன்பாடு .. | 241.1 | 241.4 | 226.6 | 178.1 | 115.2 |
| 3. அரசாங்க பணமீதியைக் கையாளல் .. | 6.0 | — | — 40.2 | 0.4 | 45.4 |
| 4 தேறிய பணக்குறையின் மொத்தம் .. | 417.5 | 462.5 | 456.1 | 391.7 | 462.4 |
| 5. சீராக்கம், அமெரிக்க உதவிகளின் இணைக்கிளையான நிதிக் கணக்குகளில் மாற்றங்களுக்கேற்ப | 4.0 | — 7.5 | 4.0 | — 16.5 | 2.3 |
| 6. வரவு செலவுத் திட்டத்தின் தேறிய விரிவுத் தாக்கம் (2 ÷ 3 ÷ 5) .. .. .. | 251.1 | 233.9 | 190.4 | 162.0 | 162.9 |

மேலே குறிக்கப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி 1963/64 கால எல்லையில் செய்யப்பட்ட பணக்குறை நிதிஈட்டத்தின் முக்கியம்சம் என்னவெனில், அது வங்கிகள் அல்லாத உள்நாட்டுச் சந்தைகளின் கடன்களை அதிகரித்ததேயாகும். இது 1962/63 இல் ரூபாய் 1535 இலட்சங்களாக இருந்து 1963/64ல் ரூபாய் 2961 இலட்சங்களாக உயர்ந்துள்ளது.

இவ்வுயர்விற்கு சேமிப்பு நிலையங்கள், காப்புறுதி நிதி—குறிப்பாக காப்புறுதிக் கூட்டுத்தாபனம்—கூட்டு நிலையங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் முதலியன அரசாங்க கொடுகடன்களுக்கு உதவிய அதிகரித்த தொகையின் பெருமளவிற் காரணமாயிற்று. அரசாங்க கொடுகடனிற்கு மிகக் கூடியளவு தொகையை தனியே தந்துதவியது, தொழிலாளர் சேமநிதியே. அரசாங்கத்தின் பிணைகளுக்கு இந்நிதி கொடுத்து உதவிய தொகை 1962/63ல் ரூபாய் 617 இலட்சங்களாக இருந்து 1963/64 இல் ரூபாய் 656 இலட்சங்களாக உயர்ந்துள்ளது. வரி ஒதுக்குப் பத்திரங்களுக்கு கொடுக்கப்பட்ட தொகையும் குறிப்பிடத்தக்களவு கூடியிருந்தது. 1962/63 இல் வெளிநாட்டு உதவியின் பயன்படுத்தல் கூடுதலாக இருந்ததெனினும் 1963/64 இல் அது குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கவில்லை. முன்னரே குறிப்பிட்டதற்கமைய வெளிநாட்டுதவிமூலம் மதிப்பீடு ரூபாய் 1750 இலட்சங்கள் என கணிக்கப்பட்டதெனினும் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டு உதவி முதல் மதிப்பீட்டிலும் பார்க்கக் குறைந்தே இருந்தது.

பணவிரிவுத் தன்மை பெற்ற மூலங்களில் இருந்து நிதியீட்டம் செய்தல் அதாவது வங்கித் தொழில் முறையில் இருந்து கடன் பெறுதலும் பணமீதிகளைக் குறைத்தலும் ஆகிய தொகை ரூபாய் 1629 இலட்சங்களாக விளங்கியது. 1963/64 இல் பணமீதியின் பயன்படுத்தல் அதிகரித்திருக்க, வங்கித் தொழில் முறையில் இருந்து பெற்ற கடன் தொகை சென்ற ஆண்டில் ரூபாய் 1781 இலட்சமாக இருந்து, ரூபாய் 1152 இலட்சமாக வீழ்ச்சியுற்றுள்ளது. வங்கித் தொழில் முறையில் இருந்து கடன்பெறும் முதன்மைக் கருவியாக மீண்டும் திறைசேரி உண்டியல் விளங்கியது. வெளிநின்ற திறைசேரி உண்டியலின் உத்தரவு எல்லையை இந்நிதி ஆண்டில் பாராளுமன்றம் இருமுறை உயர்த்தியது. இது 1963ற்குரிய நிதி அதிகாரச் சட்டத்தினல் ரூபாய் 1000 இலட்சங்களாலும் 28-8-64ல் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தினல் ரூபாய் 2500 இலட்சங்களாலும் உயர்த்தப்பட்டது. 1963/64 நிதி ஆண்டில் திறைசேரி உண்டியலுக்கு இடப்பட்ட உத்தரவு எல்லை ரூபாய் 15000 இலட்சங்களாகவும் வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் பெறுமதித் தொகை ரூபாய் 12500 இலட்சங்களாகவும் விளங்கியது. மீண்டும் மகா வங்கியே திறைசேரி உண்டியல்களுக்கு மிகப் பெருந்தொகையை வழங்கிய தனி நிறுவனமாக விளங்கியது. அது கொண்டிருந்த திறைசேரி உண்டியலின் தொகை ரூபாய் 11532 இலட்சங்களாக 1963/64 ஆண்டு முடிவில் உயர்ந்தது. இத்தொகை வெளிநின்ற திறைசேரி உண்டியல்களில் 92·2 சதவீதமாம். மறுபுறம் வர்த்தக வங்கிகள் திறைசேரி உண்டியல்களில் உள்ள தம் இருப்புக்களை குறைத்து ஏனைய அரசாங்க ஆவணங்களில் தம் முதலீட்டைக் கூட்டின. எனினும் வர்த்தக வங்கிகளில் இருந்து இவ்வாண்டில் அரசாங்கம் பெற்ற மொத்தக் கடன்கள் வீழ்ச்சியுற்றன.

1964/65 நடைமுறை நிதி ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டம் 1964 ஆண்டிற்குரிய இறுதிக்கால ஆண்டை உள்ளடக்குகிறது. 1964/65 கால எல்லை மதிப்பீடுகளுக்குரிய விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளது. ரூபாய் 5090 இலட்சப் பணக்குறைவை வங்கிகள் அல்லாத மூலங்களைத் தவிர்த்த உள்நாட்டு சந்தை வாயிலாக ரூபாய் 2500 இலட்சங்களினுலும் வெளிநாட்டு உதவி வாயிலாக ரூபாய் 225 இலட்சங்களினுலும் நிர்வாகக் கடன்கள் வாயிலாக ரூபாய் 350 இலட்சங்களினுலும் நிதிஈடு செய்யலாம் என்று வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டது. இவ்வரவு செலவுத் திட்டத்தின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் பணவீக்கத் தன்மை பெற்ற நிதியீட்டத்தை தவிர்க்கும் நோக்கத்தை உணர்ந்த முறையில் அது அமைக்கப்பட்டதாகும்.

மீண்டுவரும் செலவுகளுக்கான வாக்குப் பணங்களின் கீழ்வரும் மூலதன விடயங்கள் ஆழ்நிதி உதவு தொகைகள், கடன்களை நேரடியாகத் தீர்ப்பதற்கான ஒதுக்குத் தொகைகள், ஆகியவை தவிர்த்த மொத்த நடைமுறைச் செலவு ஒதுக்குத் தொகைகள் 1963/64ம் ஆண்டிற்குரிய உண்மைச் செலவாகிய ரூபாய் 17584 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் 1964/65ம் ஆண்டில் ரூபாய் 17451 இலட்சங்களாக விளங்கின.

இந்த வீழ்ச்சிக்குக் காரணம் உலக சந்தையில் சீனியின் விலைகள் குறைந்ததைத் தொடர்ந்து உணவு மானியச் செலவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை குறைந்ததும் திறைசேரி உண்டியல்களைக் குறைந்த வட்டி வீதத்தில் மகாவங்கி பெற்றதுமாகும். 1964/65ல் மூலதன செலவின் மதிப்பீடு ரூபாய் 6476 இலட்சங்கள் என்று கணிக்கப் பட்டுள்ளது. இது 1963/64ல் உண்மையில் அடையப் பெற்ற மூலதன செலவைவிட ரூபாய் 1443 இலட்சங்கள் அதிகமாய் உள்ளது. 1964/65க்குரிய மொத்த வருமா னம் ரூபாய் 18814 இலட்சங்கள் ஆக உயரும் என மதிப்பிடப்பட்டது. இத்தொகை சென்ற ஆண்டு உண்மையில் அடையப்பெற்ற வருமானத்திலும் பார்க்க ரூபாய் 1279 இலட்சங்கள் கூடியதாகும். மொத்த வருமானத்தில் எதிர்பார்க்கப்பட்ட இவ்வதி கரிப்பில் ரூபாய் 1066 இலட்சங்களுக்குக் காரணமாக புதிய வருமான வரிமுறைகள் கொள்ளப்பட்டன. இதையொட்டிய விபரங்கள் இவ்வறிக்கையின் அடுத்து வரும் பகுதியில் தரப்பட்டுள்ளன.

மார்கழி 1964ல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதினால் கொண்டுவரவிருந்த சில வருமான வழிமுறைகள், சட்டம் ஆக்கப்படவில்லை. எனினும் தற்காலிகமாக திறைசேரி மதிப்பீடுகளின்படி இம்முறையில் வருவாய்க்கு ஏற்படும் நட்டங்களை மேலதிகமாக ஈடு செய்யும் முறையில் வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பீட்டிற்கு எதிராக வேறு தலைப்புகளில் கூடிய வருமானம் பெறப்படும் என எதிர்பார்க்கப்படு கிறது. இத்தகைய வருமான அதிகரிப்புகள் இறக்குமதிவரி, வருமானவரி, மதுவரி, அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் வருவாய் முதலியவற்றை கொண்டதாகும். புயல், நிவாரணம், சீரமைத்தல் மற்றும் இன்னோரன்ன வகைகளால் துணைச் செலவு கள் கூடக்கூடுமெனினும், மொத்த அரசாங்கச் செலவு, மதிப்பிடப்பட்ட தொகை யிலும் பார்க்க வீழ்ச்சியுறும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. காரணம் 1964ம் ஆண்டு இறுதிப் பகுதியிலும் 1965ம் ஆண்டு முதற்பகுதியிலும் சில இடங்களில் ஏற் பட்ட வறட்சி காரணமாக நெல் விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியால் உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் அரசாங்கம் நெல் கொள்வனவு செய்யும் நெற்தொகை குறைவாகும் என எதிர்பார்க்கப்படுவதினாலேயாகும். நடைமுறைச் செலவுகளும், வருமானங்களும் திறைசேரி எதிர்பார்த்தபடி அமையுமெனின் வரவு செலவுத் திட் டத்தில் உள்ள மொத்த பணக்குறைவு மதிப்பிட்டதிலும் பார்க்க இன்னும் வீழ்ச்சி யடையும். உணவு மானியச் செலவு பற்றி யாம் கவனிக்க வேண்டியதொன்று உண்டு. அதாவது குறைந்தளவு நெல்லை அரசாங்கம் கொள்வனவு செய்வதால் வரவு செலவுத் திட்ட சேமிப்பு கூடக் கூடுமெனினும் குறைந்தளவு நெல் உற்பத்தி யின் நிமித்தம் இறக்குமதியினால் அதிக ஈடு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படின் இலங்கைச் சென்மதி நிலுவைக் கொடுப்பனவில், அது இணையான அமுக்கங்களை ஏற்படுத்திவிடும்.

அண்மைக் காலத்து இலங்கையின் வரவு செலவுத் திட்ட அனுபவத்தை ஆரா யின் மூன்று முக்கிய அம்சங்கள் வெளிப்படையாகத் தெரிகின்றன. முதலாவதாக அரசாங்கத்தின் நடைமுறை, மூலதனச் செலவை, வரிகள் வாயிலாகவும், வங்கிகள் அல்லாத மூலங்களின் கடன்பாடுகள் வாயிலாகவும் மேலதிக வருமானத்தைப் பெற்று நிதியீட்ட இலங்கை திடமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வருமானத் துறையில் குறிப்பிடத்தக்களவு பெருக்கம் ஏற்பட்டுள்ளது. 1964ல் அரசாங்க வரு

மானம் மொத்த தேசிய உற்பத்தியில் 24·6 சதவீதமாக அமைந்தது. அபிவிருத்தி அடையும் ஒரு நாட்டில் இந்த விகிதாசாரம் மிக அருமையாகவே அடையப்படுகிறது. இலங்கையின் வரியிறுப்பு முயற்சி மிகக் கடுமையாகவே கையாளப்பட்டிருக்கிறது. இது பல துறைகளிலே ஒப்பியல்பில் உயர்ந்த வரிவீதங்களைக் கொண்டிருந்தது. அரசாங்கச் செலவுத் தேவைகள் அதிகரித்து வரும் ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்படும் நிதியீட்ட விரிவின் அளவை மட்டுப்படுத்துவதற்கு இத்தகைய நடவடிக்கை அவசியமாயிற்று.

இரண்டாவதாக அரசாங்கத்திற்கு கிடைக்கக்கூடிய நிதிச் சாதனங்களில் பெரும் பகுதியை உணவு மானியங்கள் தொடர்ந்து பிடித்துக் கொள்கின்றன. 1963ம் ஆண்டறிக்கை பொருளாதார வளர்ச்சியின் அதிகரிப்பு வீதத்தை விரைவாக்குவதற்கான சாதனங்களைத் திரட்டுவதற்கும், பணவீக்க அமுக்கங்களை மட்டுப்படுத்துவதற்குமான ஒரு திட்ட அமைப்பின் அடிப்படையில் உரிய முறையில் மானியச் செலவுகள் அமைய வேண்டிய அளவை ஆராய வேண்டிய அவசியத்தை கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது.

அவ்வறிக்கை மேலும் வெளிநாட்டு ஒதுக்குப் பணம் உள்ளவரை பணவீக்கத் தன்மை கொண்ட நிதியீட்டம் (இது உணவு மானியச் செலவுகளால் ஓர் அளவு அவசியமாகிறது) விலைகளின் பொது மட்டத்தை அதிகரிக்கச் செய்யாததற்குக் காரணம் இறக்குமதி நிரம்பல்கள் இந்நிதியீடட்த்தின் பயனாய் மேலதிகமாக எழும் கேள்வியை திருப்தி செய்யத் தக்கதாய் அமைந்திருந்தமையே எடுத்துக் காட்டிற்று. இறக்குமதி நிரம்பல் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் பண விரிவு கொண்ட நிதியீட்டம் விலைகளின் பொது மட்டத்தில் அமுக்கங்களை ஏற்படுத்துகிறது. இப்படியான சூழ்நிலையில் நுகர்வோருக்கு மானிய விலைகளின் மூலம் ஏற்படும் நன்மை ஏனைய நுகர்ச்சிப் பொருட்களின் விலைகளின் அதிகரிப்பினால் ஓரளவாகுதல் கிடைக்காமற் போகிறது.

இலங்கையின் வரவு செலவுத் திட்டம் பற்றிய அண்மைக்கால அனுபவம் எமக்கு எடுத்து விளக்கும். மூன்றாவது அம்சம் என்னவெனில் மூலதன செலவைப் பொறுத்தவரை அதனின் பணி தொடர்பாக திருப்திகரமாக அமையவில்லை என்பதையே தொடர்ச்சியாக வெளிவந்த வரவு செலவுத் திட்டங்கள் இலங்கையின் அபிவிருத்தி முயற்சியை விரைவு படுத்தும் நோக்கத்துடன் மூலதன செலவிற்கு பெருமளவு நிதியை ஒதுக்கியுள்ளது. எனினும், ஒவ்வொரு ஆண்டின் இறுதி முடிவிலும் மூலதன வாக்கு உண்மையான செலவீட்டில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே தென்படுகிறது. இது மூலதன செயல்முறைகளையும் திட்டங்களையும் நடைமுறைக்கு கொண்டு வருவதில் உள்ள குறைபாடுகளையும் திறனின்மையையும் எடுத்துக் காட்டுகிறது. இது அரசாங்கம் தனது அபிவிருத்தி முயற்சிகளுக்கு இயைந்த விதத்தில் தனது அமைப்பு நிர்வாக ஆற்றல்களை விரைந்து இயக்க வேண்டும் என்னும் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறது. திட்ட அமைப்புகளிலும், அவற்றின் செயலாக்கத்திலும் உள்ள குறைபாடுகள் அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறையில் இயக்குவதற்கு தடையாக அமைவதோடு வெளிநாட்டு உதவியின் பயனுள்ள முறை உபயோகத்தின் வேகத்தையும் தணிக்கக் கூடுமாகையால், அதன் விளைவாக பொருளியல் முன்னேற்றத்தின் விசை பாதிக்கப்படக்கூடும்.

## (ஆ) தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன்

1962ம் ஆண்டினைப் போலவே 1964ம் ஆண்டிலும் தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் (வேறுபடுத்துவதில் உள்ள புள்ளிவிபர இடர்பாடுகளின் காரணமாகத் தனியார் துறை, அரசாங்கக் கூட்டுத்தாபனங்களையும் உள்ளடக்குமாறு வரையறை செய்யப்பட்டுள்ளது) நாட்டின் மொத்த நாணய விரிவில் ஓரளவு முக்கியத்துவம் வாய்ந்த துணை செய்யும் பங்கினை ஏற்றது. கடந்த வருடங்களில் தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடனின் அதிகரிப்பு, ஒப்பியல்பிற் சிறிதாக அமைந்திருந்தது. உதாரணமாக இவ்வதிகரிப்பு, 1962ம் ஆண்டில் 422 இலட்சம் ரூபாய்களாகவும், 1961ம் ஆண்டில் 125 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தது. மறுபுறம், மிக அண்மைக் காலத்திலே இறக்குமதியினதும் அந்நிய செலாவணியினதும் மட்டுப்படுத்தல்களின் மூலம் அந்நிய ஒதுக்குபணச் செலவு குறைந்ததன் பயனாக வங்கித் தொழில் முறையின் திரவச் சொத்துக்கள் அதிகரித்து, அதனால் வங்கியின் கடன் வழங்கும் ஆற்றலும் அதிகரித்தது. ஏற்றுமதி உண்டியல்கள் தவிர்த்த, தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன், 1962ம் ஆண்டிற்குரிய அதனது 1242 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1964ம் ஆண்டில் 1117 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ளது. ஏற்கனவே கூறப்பட்டுள்ளபடி, அரசாங்கத்தின் பணவீக்கத் தன்மையான நிதிக்குறை, அண்மைக் காலப் பகுதியில், மிதமான ஒரு வீழ்ச்சிப் போக்கினைக் காட்டியது. இது 1962/63, 1963/64 ஆகிய நிதி வருடங்களில் வருடத்திற்கு ஏறக்குறைய 1600 இலட்சம் ரூபாய்களாக நிலையாக வைத்திருக்கப்பட்டது. எனவே, தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடனின் அதிகரிப்பு, அரசாங்கத்தின் விரிவடையும் பணக்குறை வீழ்ச்சியுறும் தருணத்திலும் மொத்த நாணய விரிவை உயர்ந்த மட்டத்தில் வைத்திருக்க உதவியாயிருந்தது.

தனியார் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்களின் அதிகரிப்புகள் கீழ்க் காணப்படும் அட்டவணையிற் சுருக்கித் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 1 (4)

### தனியார் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | மார்கழி 1963 | மார்கழி 1964 | மாற்றம் |
|---|---|---|---|
| (அ) சேகரிக்கும் நிலையிலுள்ள பணவிடயங்கள் .. .. | 82·1 | 74·5 | —7·6 |
| (ஆ) உள்நாட்டு உண்டியல்கள் (1) .. .. | — | — | — |
| (இ) இறக்குமதி உண்டியல்கள் (1) .. .. | 65·8 | 77·8 | +12·0 |
| (ஈ) ஏற்றுமதி உண்டியல்கள் .. .. | 72·8 | 53·6 | —19·2 |
| (உ) மேலதிகப் பற்றுக்கள் .. .. | 331·9 | 372·3 | +40·4 |
| (ஊ) கடன்கள் .. .. | 213·0 | 279·4 | +66·4 |
| மொத்தம்: .. | 765·6 | 857·6 | +92·0 |

(1) 1963ம் ஆண்டிற்கென அவ்வாண்டிற்குரிய ஆண்டறிக்கையிலே கொடுக்கப்பட்ட இவ்விடயங்களின் எண் தொகைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டைப் போலவே, 1964ம் ஆண்டிலும், பிரதானமாகக் கடன்கள், மேலதிகப் பற்றுக்களின் மூலமாகவே வர்த்தக வங்கிக் கொடுகடன் அதிகரிக்கப்பட்டது. முற்பணங்களின் அதிகரிப்பு, இலங்கையர் வங்கிகளில் மட்டுமே ஏற்பட்டிருந்தது. இலங்கையர் வங்கிகளினால் அளிக்கப்பட்ட மொத்த முற்பணங்கள் 1208 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்திருக்கையில், வெளிநாட்டு வங்கிகளால் அளிக்கப்பட்ட முற்பணங்கள் 289 இலட்சம் ரூபாய்களால் சுருங்கியுள்ளன.

மகா வங்கியின் அரையாண்டு அளவை, வர்த்தக வங்கிக் கொடுகடன்களின் பாகுபாட்டை, முற்பணங்கள் அளிக்கப்பட்ட தேவைகளின் அடிப்படையில் தருகின்றது. கீழ்க்காணும் அட்டவணை, 1963, 1964 ஆகிய ஆண்டுகளின் போது தேவைகளின்படி வழங்கப்பட்ட முற்பணத் தொகைகளின் மாற்றங்களை எடுத்துக் காட்டுகின்றது.

அட்டவணை 1—(5)

## தேவைகளின்படி பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | மார்கழி 1963 | மார்கழி 1964 | மாற்றம் |
|---|---|---|---|
| வர்த்தகம் .. .. | 451·6 | 488·2 | +36·6 |
| நிதி .. .. | 71·1 | 91·1 | +20·0 |
| விவசாயம் .. .. | 25·7 | 28·9 | + 3·2 |
| கைத்தொழில் .. .. | 43·4 | 72·1 | +28·7 |
| நுகர்ச்சி .. . | 36·6 | 48·9 | +12·3 |
| ஏனைய கடன்கள் . .. | 61·9 | 52·5 | — 9·4 |
| மொத்தம்: .. | 690·4 | 781·7 | +91·3 |

மேலே காட்டப்பட்டுள்ளபடி, வர்த்தக வங்கி முற்பணங்களில் ஏற்பட்ட பிரதான அதிகரிப்புகள், வரித்தகம், நிதி, கைத்தொழில் ஆகிய தேவைகளுக்கானவையாகும். இறக்குமதி வர்த்தகம், மொத்த வியாபாரம், சில்லரை வியாபாரம் ஆகிய வற்றிற்கான அதிகரித்த கொடுகடன்களையே, வர்த்தகத் தேவைகள் பெரும்பாலும் பிரதிபலித்தன. கைத்தொழிற் தேவைகளுக்காக வழங்கப்பட்ட கொடுகடனின் 105 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட அதிகரிப்பு, கட்டட ஆக்க, பொறியியற் கைத்தொழில்களிற்கு வழங்கப்பட்டது. நுகர்ச்சியின் பாற்பட்ட கடன்களும், மிதவாகவெனினும் அதிகரித்தே காணப்பட்டன. எனினும், தேவைகளின்படி பாகுபடுத்தப்பட்ட வங்கி முற்பணங்களினது தொகைகளின் மாற்றங்களை எடுத்து விளக்குவது கவனத்துடன் செய்யப்பட வேண்டியது அவசியமாகும். கடந்த ஆண்டாகிய 1963ல் ஏனைய கடன்கள் என்ற பகுப்பின் கீழ்வரும் முற்பணங்களில் 503 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட ஒரு பெரிய அதிகரிப்பு காணப்பட்டது. மறுபுறம் 1964ம் ஆண்டில் இப்பகுப்பிலே ஒரு வீழ்ச்சி காணப்பட்டது. கடந்த வருடத்தோடு ஒப்பியல் அடிப்படையில் நோக்குகையில், ஏனைய தலைப்புகளின் கீழுள்ள அதிகரிப்புகள் வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்டுத் தேவைகளின்படி பாகுபடுத்தப்பட்ட முற்பணப் பாகுபாட்டின் மேலும் விபரமான மாற்றங்களை எவ்வளவு தூரம் பிரதிபலிக்கின்றன என நிர்ணயித்தல் கடினமானதாகும்.

மகா வங்கியானது, கொடுகடன் விரிவு வேகத்தைத் தடுக்கும் நோக்கத்துடன், ஏற்கனவே நடைமுறையில் இருந்த பல நடவடிக்கைகளை இவ்வருடத்தின்போது தொடர்ந்தும் நிலையாக வைத்திருந்தது. பொருளாதாரத்திலுள்ள உற்பத்தித் துறைகளின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்தல் அவசியமாக இருக்கையில், (அபிவிருத்திக் கட்டங்களிலே இக்கடன் தேவைகள் அதிகரிக்கவும் கூடும்) தற்போதைய சூழ்நிலையில், அவசியமற்ற நோக்கங்களுக்கான கொடுகடன் அதிகரிப்பைத் தவிர்ப்பது தேவையான தொன்றாகும். குறிப்பாக, உத்தேச நோக்கங்களுக்கான கொடுகடன் அதிகரிப்புக்களின் மீது நெருங்கிய கண்காணிப்பு இருந்து வருகிறது. இது ஏனெனில் பணவீக்க அமுக்கமுள்ள காலப் பகுதிகளிலே பிற்காலத்தில் விலை அதிகரிப்புகள் ஏற்படும் என உத்தேசித்துக் கையிருப்புக்களைப் பதுக்கி வைப்பதற்கு இக்

கடன் தூண்டுகோலாகிவிடும் என்பதனுலேயாகும். எனவே, மகா வங்கியினது கொள்கையின் குறிக்கோள்கள் இருவகைப்படுகின்றன. அவையாவன, நாணய நிலைமையை முழுமையாக நோக்குமிடத்து, கொடுகடன் விரிவின் அடிப்படை அதனளவில் அளவு மீறியதாய் இல்லாமலிருப்பதை நிச்சயப்படுத்துதலும், அத்துடன் கொடுகடனின் தேர்ந்த வழிப்படுத்துதலை உற்பத்தித் தேவைகள், அத்தியாவசியத் தேவைகள் ஆகியனவற்றிற்குச் செல்லுமாறு ஊக்குவிப்பதோடு, அவசியமேற்படின் வங்கி வசதிகளைப் புதிய பிரதேசங்களுக்கு அளித்தலுமாகும். இக்குறிக்கோள்களை அடைவதற்கு, சூழ்நிலைக்கேற்ப அவசியமான இத்தகைய நடவடிக்கைகளை மேலும் மகாவங்கி மேற்கொள்ளும்.

## (இ) பணநிரம்பல்

1964ல் இலங்கையின் மொத்தப் பணநிரம்பல் ரூபாய் 1158 இலட்சங்களாக அல்லது 7·7 சதவீதமாகக் கூடியது. இது அரசாங்க இயக்கத்தின் விரிவின் தன்மையையும் தனியார் துறைக்கான வர்த்தக வங்கிகளின் கொடுகடன் உருவாக்கத்தினதும் ஒன்று சேர்ந்த தாக்கத்தைப் பிரதிபலிக்கிறது. கீழே கொடுக்கப்பட்ட அட்டவணை இவ்வாண்டிற்குரியதாக பணநிரம்பலின் நிர்ணயிப்புக்காரணிகளை ஆராய்கிறது.

அட்டவணை 1 (6)

### பணநிரம்பலின் மாற்றம்

(1963ம் ஆண்டு இறுதி தொட்டு 1964ம் ஆண்டு இறுதிவரை)

பத்து இலட்சம் ரூபாய்கள்

| | |
|---|---|
| விரிவு ஏதுக்கள் | |
| (அ) வங்கிகளிடமிருந்து அரசாங்கக் கடன்பாடு .. .. | 104·6 |
| (ஆ) தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் .. .. | 111·7 |
| (இ) வங்கிகளின் வெளிநாட்டு இருப்புக்களின் மாற்றம் (தேறல்) .. | 16·9 (அ) |
| மொத்தம். .. | 223·2 |
| சுருக்க ஏதுக்கள் | |
| (அ) தவணை, சேமிப்பு வைப்புகளின் அதிகரிப்பு .. .. | 52·5 |
| (ஆ) அரசாங்க பணமீதிகள் .. .. | 2·9 |
| (இ) வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புகளின் (தேறிய) அதிகரிப்பு .. | 4·9 |
| (ஈ) மகாவங்கியின் ஏனைய பொறுப்புகளினதும் கணக்கினதும் (தேறிய) அதிகரிப்பு .. .. | 54·8 (ஆ) |
| (உ) சிராக்கங்கள் .. . | 2·3 |
| மொத்தம்: .. | 117·4 |
| பணநிரம்பலின் தேறிய மாற்றம் .. | +115·8 |

(அ) அரசாங்க நிறுவனங்களில் இருந்து மாசி 1964ல் மகாவங்கி பெற்ற வெளிநாட்டு இருப்பாகிய ரூபாய் 533 இலட்சங்கள் தோற்றப் பெறுமானத்தை உள்ளடக்கியது இந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்கு இடம் கொடுக்கையில் வெளிநாட்டு வங்கி இருப்புக்களின் தேறிய தொகை ரூபாய் 364 இலட்சங்களால் இவ்வாண்டில் வீழ்ச்சியுற்றதாகும்.

(ஆ) அரசாங்க நிறுவனங்களுக்குறிய மகாவங்கியின் ஏனைய பொறுப்புக்களின் அதிகரிப்பின் ரூபா 533 இலட்சங்கள் மகாவங்கி அரசாங்க நிறுவனங்களிற்கென வெளியிட்ட ஆவணங்களின் சமமதிப்பீட்டையே எடுத்துக் காட்டுகிறது.

நாணயங்களையும் கேள்வி வைப்புகளையும் உள்ளடக்கிய மொத்தப் பணநிரம்பல் 1963ம் ஆண்டு முடிவில் ரூபாய் 15066 இலட்சங்களாக இருந்து 1964ஆம் ஆண்டு முடிவில் ரூபாய் 16218 இலட்சங்களாகக் கூடியுள்ளது. 1963ம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 1964ல் பணநிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு குறைந்தே காணப்பட்டது. 1963ல் பணநிரம்பல் ரூபாய் 1633 இலட்சங்களாக அல்லது 12·2 சதவீதமாக உயர்ந்திருந்தது. 1964ம் பஞ்சாக ஆண்டில் வங்கி அமைப்புகளில் இருந்து அரசாங்கம் பெற்ற கடனும் தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகள்

கொடுத்த கடனும் 1963ம் ஆண்டோடு ஒப்பிடுகையில் அளவில் குறைந்தே காணப்படுகிறது. முன்பு கூறியபடி பணவிரிவின் அளவு தொடர்ந்து ஒப்பியல்பில் உயர்ந்தே விளங்கியது. அத்துடன் 1964ம் ஆண்டிற்குரிய பணநிரம்பல் 1963ம் ஆண்டிற்குரிய முந்திய ஆண்டுகளிலும் பார்க்க விகிதாசாரத்தில் அதிகரித்தே காணப்பட்டது.

1962, 1963ம் ஆண்டுகளிற் போல் தவணை சேமிப்பு வைப்புகள் தொடர்ந்து குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இவ்வதிகரிப்பு விரிவுக்காரணிகள், பணநிரம்பலின் மேல் ஏற்படுத்தும் தாக்குதலை ஈடு செய்வதாய் இருந்தது. தவணை சேமிப்பு வைப்புகள் 1962, 1963ம் ஆண்டுகளுக்குரிய அதிகரிப்புகளாகிய, முறையே ரூபாய் 502 இலட்சங்களுடனும், ரூபா 634 இலட்சங்களுடனும் ஒப்பிடுகையில் 1964ம் ஆண்டில் ரூபாய் 525 இலட்சங்களாக அதிகரித்தன. சென்ற ஆண்டு ஆண்டறிக்கையில் குறிப்பிட்டது போன்று பணநிரம்பலின் அதிகரிப்பை ஈடு செய்யும் ஏதுவாக தவணை சேமிப்பு வைப்புக்கள் இருப்பினும் இவ் வைப்புக்கள் ஒப்பியல்பான திரவத்தன்மை பொருந்திய இருப்புச் சொத்தாகவே அமைகின்றன.

அண்மைக்காலத்தில் கேள்வி வைப்புக்களின் பங்கினோடு ஒப்பிடும்பொழுது பண நிரம்பலின் நாணயப் பங்கு, தொர்டர்ச்சியாக அதிகரித்துள்ளதைக் காணலாம். இதனல் 1963ல் பணநிரம்பலின் மொத்த அதிகரிப்பில் 71 சதவீதம் நாணய அதிகரிப்பாக அமைந்திருந்தது. எனினும் 1964ல் இந்தப் போக்கில் குறிப்பிடத்தக்களவு எதிர்மாறுன மாற்றம் ஏற்பட்டது. இவ்வாண்டில் பணநிரம்பலின் அதிகரிப்பில் நாணயப் பங்கு 21 சதவீதத்தையே கொண்டதாயிருந்தது. கேள்வி வைப்புக்களோ 79 சதவீத அதிகரிப்பைக் கொண்டதாயிருந்தன. இதன் விளைவாக பணநிரம்பலில் நாணய விகிதாசாரம் 1963ல் 55 சதவீதமாய் இருந்தது. 1964ல் 52·6 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. கேள்வி வைப்புகளுடன் ஒப்பிடுகையில் நாணயத்தில் ஏற்பட்ட மெது விகிதாசார அதிகரிப்புடன் நாணயத் தொகுப்பு அமைப்பில் வெவ்வேறு பெறுமானத் தாள்களின் இனங்களும் மாற்றமடைந்திருக்கின்றன. அண்மைக் காலத்தில் 100,50 ரூபாய் இனத்தாள்களின் சுற்றோட்டத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. எனினும் 1964ம் ஆண்டில் வைகாசி, புரட்டாதி மாதங்களுக்கிடையில் 100 ரூபாய்த் தாள்கள் ரூபாய் 2980 இலட்சங்களில் இருந்து ரூபாய் 1702 இலட்சங்களாக வீழ்ச்சியுற்றது. அவ்வேளையில் 10 ரூபாய் இனத் தாள்கள் ரூபாய் 2574 இலட்சங்களில் இருந்து ரூபாய் 3358 இலட்சங்களாகக் கூடியது. இந்நிகழ்வு 100 ரூபாய் இனத்தாள்கள் செல்லுபடியாகாத நிலை உருவாகும் என்ற எதிர்பார்ப்புடனும் உயர்ந்த பெறுமானத் தாள்களைப் பதுக்கி வைப்பதன் மூலம் கையாளப்படும் வரி இறுப்புத் தவிர்ப்புக்கு எதிராக வரவு செலவு திட்டத்தில் எடுத்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளுடனும் சம்பந்தப்பட்டதாம்.

## (4) 1964ம் ஆண்டின் வெளிநாட்டுக் கொடுப்பனவுகள்.

இப்பகுதியின் இரண்டாவது பிரிவில், இலங்கையின் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளினது நிலை பற்றிய சில நீண்ட காலப் போக்குகளும், இத்துறையில் இலங்கையை எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சனைகளும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. 1964ம் ஆண்டு இலங்கையின் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளினது நிலைமை, இப்போக்குகளினையும் பிரச்சனைகளினையும் தெளிவாகச் சித்திரித்துக் காட்டியுள்ளது. 1964ம் ஆண்டில் இலங்கையின் சென்மதி நிலுவைகள் நிலைமை பற்றி விளக்கமானவோர் விரிவுரை, இவ்வறிக்கையின் 2ம் பகுதியில் தரப்பட்டுள்ளதாயினும், இதில் நாட்டின் அனுபவங்கள் பற்றிய முக்கிய அம்சங்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

பின்வரும் அட்டவணை, 1964ம் ஆண்டு இலங்கையின் வெளிநாட்டுக் கணக்குகளுடன் தொடர்புடைய பல மொத்த தொகைகளைக் கடந்த சில ஆண்டுகளிற்கானவையுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றது.

அட்டவணை 1—(7)

## இலங்கையின் சென்மதி நிலுவை 1960 – 64

பத்து இலட்சம் ரூபாய்கள்

| | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 தற்காலிக மானவை |
|---|---|---|---|---|---|
| 1. வணிகப் பொருட்கள்; | | | | | |
| ஏற்றுமதிகள் .. | +1796 | +1707 | +1763 | +1708 | +1764 |
| இறக்குமதிகள் .. | —2006 | —1794 | —1906 | —1869 | —1957 |
| வர்த்தக நிலுவை .. | — 210 | — 87 | — 143 | — 161 | — 193 |
| 2. சேவைகள் .. | — 32 | — 18 | — 4 | — 20 | + 6 |
| 3. நன்கொடைகள் .. | + 22 | + 11 | + 7 | + 13 | + 40 |
| 4. நடைமுறைக் கணக்கு நிலுவை நிதியீட்டியவகை .. | — 220 | — 94 | — 140 | — 168 | — 148 |
| 5. தனியார் மூலதனம்: | | | | | |
| நீண்டகால மூலதனம் .. | + 2 | — 8 | — 2 | + 5 | — 2 |
| குறுகியகால மூலதனம் (1) .. | — 7 | + 14 | — | — 4 | — 13 |
| 6. அரசகரும வங்கி மூலதனம் | | | | | |
| (1) தேறிய நீண்டகால வெளிநாட்டுப் பொறுப்புக்களின் மாற்றம் .. | + 20 | + 19 | + 40 | + 75 | + 7 |
| (2) தேறிய குறுகிய கால வெளிநாட்டுப் பொறுப்புக்களின் மாற்றம் .. | — 17 | + 81 | + 44 | + 46 | + 54 |
| (3) வெளிநாட்டுச் சொத்துக்களின் மாற்றம் .. | + 193 | + 10 | + 28 | + 42 | + 111 |
| (4) ஏனைய .. | — | — 2 | — | — | — |
| 7. பிழைகளும் தவறுகளும் .. | + 29 | — 19 | + 31 | + 4 | — 9 |

(1) சக அடையாளம், சொத்துக்களின் வீழ்ச்சியையும், பொறுப்புகளின் அதிகரிப்பையும் குறிக்கும்

மேலுள்ள அட்டவணையிற் காட்டப்பட்டது போன்று வரவுகளினதும் கொடுப்பனவுகளினதும் புள்ளி விபரத் தரவை ஆதாரமாகக் கொண்ட 1964ம் ஆண்டு வணிகப் பொருட் கணக்கின் குறை, 1963ம் ஆண்டிலும் பார்க்கக் கூடுதலாக விருந்தது. இவ்வாண்டில் ஏற்றுமதி வரவும், இறக்குமதிச் செலவீடும் அதிகரித்தன. தெங்குப் பொருட்களினதும், இரப்பரினதும் ஏற்றுமதியளவில் கூடிய அதிகரிப்பின் பயனாக, 1964ம் ஆண்டில் ஏற்றுமதி வரவுகள் அதிகரித்தன. அதே சமயம், தேயிலை ஏற்றுமதியளவில் சிறு வீழ்ச்சி ஏற்பட்டது. இவ்வாண்டு எல்லா ஏற்றுமதிகளினதும் பொது விலை குறிகாட்டி மாற்றமுறாதிருந்தது. எனினும் ஏற்றுமதி வரவுகளின் அதிகரிப்பு இறக்குமதிச் செலவீட்டின் ஏற்றத்திலும் கூடுதலாக இருந்தது. இவ்வாண்டில் குறிப்பாக ஆடை இறக்குமதியளவில், தீட்சணமான அதிகரிப்பு ஏற்பட்டதுடன் பெரும்பாலும் வெளிநாட்டு விலையதிகரிப்பின் காரணமாக அரிசி, கோதுமைமா, சீனி ஆகியவற்றின் இறக்குமதிச் செலவீடுகளிலும் அதிகரிப்புகளேற்பட்டன. மேலும், மற்றைய நுகர்ச்சிப் பொருட்களினதும் சில நடுத்தரப் பொருட்களினதும் இறக்குமதித் தொகையில் மிதமான அதிகரிப்புகளேற்பட்டதாகச் சுங்கத் தரவில் பதியப்பட்டுள்ளது. போக்கு வரத்துச் சாதனங்களின் இறக்குமதிக் குறைவினால் முதலீட்டப் பொருட்களின் இறக்குமதியில் சிறு வீழ்ச்சியேற்பட்டது. சென்மதி நிலுவைக் கணக்கில் பதியப்பட்ட வணிக இறக்குமதிப் பொருட்களின் மொத்தப் பெறுமானத்தின் ஒருபகுதிநன்கொடைப் பொருட்களை அடக்கியுள்ளது. இந் நன்கொடைகள் முக்கியமாக அமெரிக்கக் குடியரசிலிருந்து அமெரிக்கக் கூட்டுறவு நிறுவனத்தின் கீழ் (கெயர்) அனுப்பப்படும் மாவையும், பாலையும், சீனாவிலிருந்து பெற்ற உதவியையும், (முக்கியமாக ஆடை) கனடாவிலிருந்து பெற்ற உதவியையும் கொண்டதாவனவாம்.

1963ம் ஆண்டு சேவைகளின் கணக்குத் தொகையில் ஏற்பட்ட 200 இலட்சம் பணக்குறைக்கெதிராக இவ்வாண்டு 60 இலட்சம் ரூபாக்கள் மேலதிகம் ஏற்பட்டமை சிறிதளவில் வணிகப் பொருட்கணக்கின் குறையினது அதிகரிப்பை ஈடு செய்யவியலுமாயிருந்தது. இச்சேவைக் கணக்குத் தொகையின் மேலதிகம் ஓரளவிற்கு, இலாபங்களையும், பங்கிலாபங்களையும் காலந் தாழ்த்திக் கொடுப்பதற்கான ஒழுங்கு ஆவணி மாதம் 1964ம் ஆண்டு புகுத்தப்பட்டதைத் தொடர்ந்து முதலீட்ட வருவாயில் ஏற்பட்ட குறைந்த பணக்குறையின் பிரதிபலிப்பே எனலாம். தனியார் அனுப்பும் தொகைகள், குடிபெயர்வோர் சொத்து மாற்றங்கள், அரசகரும நன்கொடைகள், என்பவற்றின் தேறிய மிகுதிகளை உள்ளடக்கிய ''நன்கொடைகளின்'' மேலதிகமும், வணிகப் பொருட் கணக்கின் குறையை ஓரளவு ஈடு செய்தது. ஏற்கனவே குறிப்பிடப்பட்ட அரசகரும நன்கொடைகள் அதாவது பொருள் வகை உதவி, 1963ம் ஆண்டு, 436 இலட்சம் ரூபாக்களிலிருந்து 1964ம் ஆண்டு 764 இலட்சம் ரூபாக்களாக அதிகரித்தது. கட்புலனாகாத் தொகை மீதியிலேற்பட்ட இத் திருத்தத்தின் பயனாக, 1964ம் ஆண்டு இலங்கையின் நடைமுறைக் கணக்கு முழுவதற்குமான மீதி, 1963ம் ஆண்டிலும் பார்க்கக் குறைந்து விளங்கியது. நடைமுறைக் கணக்கு மீதி, 1964ம் ஆண்டு 148 இலட்சம் ரூபா குறைக்கெதிராக முன்னைய ஆண்டில் 168 இலட்சம் ரூபா பணக்குறையைக் காட்டியது.

முன்னைய அட்டவணை, நடைமுறைக் கணக்கு நிலுவைக்கு எவ்விதத்தில் நிதியீட்டப்பட்ட தென்பதையும் காட்டுகின்றது. அநேகமாகக் குறுகிய காலத் தவணைக்கான தனியாரின் தேறிய மூலதன வெளியேற்றம், 150 இலடசம் ரூபாக்களாக இருந்தது. நடைமுறைக் கணக்கிலுள்ள மீதிக்குறை, அரசகரும வங்கி மூலதனத்தின் மாற்றங்களினால், அதாவது வெளிநாட்டு இருப்புக்களின் குறைப்பாலும், வெளிநாட்டுப் பொறுப்புக்களின் அதிகரிப்பாலும் நிதியீடு செய்யப்பட்டது. ஆழ்நிதிகளிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்ட 600 இலட்சம் ஸ்டேர்லிங் கடன்கள் மீட்பொன்றைத் தவிர்த்து, 1964ம் ஆண்டு வெளிநாட்டு இருப்புக்கள் 510 இலட்சம் ரூபாக்களால் குறைவுற்றன. நடைமுறைக் கணக்கிலுள்ள குறைக்கு நிதியீட்டும் சாதனமாக விளங்கிய நீண்டகால வெளிநாட்டுப் பொறுப்புக்கள் அதாவது தேறிய நீண்ட காலக் கடன்பாடு 660 இலட்சம் ரூபாக்களாகும். எனினும், ஸ்டேர்லிங் கடன் மீட்புக் கொடுப்பனவை எடுத்துக்கொள்ளின், வெளிநாட்டுப் பொறுப்பின் தேறிய அதிகரிப்பு 70 இலட்சமாக விளங்கியது. நடைமுறைக் கணக்கிலுள்ள குறையில், 540 இலட்சம் ரூபாக்கள் குறுகிய கால அரசகருமப் பொறுப்புக்களின் அதிகரிப்பினால் நிதியீடு செய்யப்பட்டது. இப்பொறுப்புக்கள் முக்கியமாக இலங்கை கொடுக்க வேண்டிய கொடுப்பனவு உடன்படிக்கை மீதிகள், அரசாங்க அரிசி இறக்குமதிகளைப் பொறுத்த மட்டில் காலதாமதக் கொடுப்பனவுகள் ஆவனவாம்.

வெளிநாட்டுச் சொத்துக்களின் மேலும் கூடிய வீழ்ச்சி குறுகிய காலப் பொறுப்புக்களின் அதிகரிப்பு ஆகிய இவ்விரு விருத்திகளும் அவசியமாகக் கவலைக்குரிய விடயங்களாகும். 1964ம் ஆண்டு இறுதியில் இலங்கையின் மொத்த வெளிநாட்டு இருப்புக்கள் (ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகளைவிட) 3047 இலட்சம் ரூபாக்களாக இருந்தன. இத் தொகையில் 1359 இலட்சம் ரூபாக்கள் மகா வங்கியின் சர்வதேச ஒதுக்கு நிதியாகும். சர்வதேச ஒதுக்கு நிதியின் திரவத் தன்மை வாய்ந்த மீதிகள் 497 இலட்சம் ரூபாக்களாக இருந்தன மீதி பெரும்பாலும் அன்னிய நாட்டுப் பிணைகளைக் கொண்டுள்ளது. ஏற்றுமதி உண்டியல்களையும் தொழிற்பாடு மீதிகளையும் கொண்ட வர்த்தக வங்கிகளின் அன்னிய மீதிப் பணங்கள் மொத்த வெளிநாட்டிருப்புக்களில் 1073 இலட்சம் ரூபாக்களாக இருந்தன.

முன்னையதொரு பிரிவில் கூறப்பட்டது போன்று, வர்த்தக விகிதத்தின் பாதகமான போக்குகளும், ஏற்றுமதிகளின் மெது வளர்ச்சியும் அபிவிருத்தியடையும் நாடுகளின் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளின் கணக்குத் தொகையில் கடுமையான தாக்குதல்களை உண்டுபண்ணின. இறக்குமதிகளிலேற்பட்ட அதிகரித்த அமுக்கங்கள் ஒருபுறமும், தேவைக்குப் போதாத ஒதுக்குகள் மறுபுறமும் இருக்கும்பொழுது,

பொருளாதாரத் தொழிற்பாட்டின் குழப்பங்களைத் தவிர்த்து, அபிவிருத்தி வீதத்தைத் துரிதப்படுத்த வேண்டுமாயின், இந்நாடுகள் குறுகிய கால-நீண்டகால வெளிநாட்டுச் சொத்துக்களை, இருப்பதைவிடக் கூடுதலாகப் பெற வேண்டிய நிலைமையினை அடைவது அவசியமாகும். ஏற்கனவே இலங்கை, இப்பிரச்சனைகளையும் கஷ்டங்களையும் கூடியளவில் அனுபவித்துக் கொண்டு வருகின்றது. இலங்கை, தனது கொடுப்பனவுப் பிரச்சனைகளைத் தணிக்க வேண்டுமாயின், வெளிநாட்டுச் சொத்துக்களின் வரவை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் இத்தகைய வரவு பெறப்படின் திடமான அபிவிருத்தித் திட்டங்களினூடும், பின்வரும் வருடங்களில், தனது சென்மதி நிலுவைகளின் நிலையைப் பலப்படுத்தவுங் கூடிய தக்க நாணய நிதிக் கொள்கைகளோடும் இணைக்கப்பட்ட முறையில் பயன்படுத்தப் படல் வேண்டும்.

குறுகிய காலத் தன்மை வாய்ந்த வெளிநாட்டுப் பொறுப்புக்களின் சேர்க்கை குறிப்பாகக் கஷ்டமான நியதிகளின் கீழ் பெற்ற நிரம்பல் செய்வோரின் கொடுகடன்கள், போதியளவு திட்டங்களுடனும், கொள்கைகளுடனும் சேர்ந்து அமையாவிடின், தற்காலிகமாக ஓரளவு உதவியை அளிப்பினும், வருங்காலத்தில் கடுமையான சுமைகளைத் தாங்க வேண்டிய நிலைக்கு வழிகோலும். இலங்கையின் தற்போதைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள், வேறு பல அபிவிருத்தியடையும் நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது குறைவாகவே விளங்குகின்றன. ஆனால் போதிய கவனமெடுக்கப்படாவிடின், இலங்கையினது கொடுப்பனவுக் கஷ்டங்கள் அதற்கு ஒவ்வாத வகை வெளிநாட்டுக் கொடுகடன் உதவியை நாடவேண்டிய நிலையை ஏற்படுத்திவிடக்கூடும்.

முடிவுரை

முன்கூறப்பட்ட பக்கங்களில் இலங்கையின் பொருளாதாரத்தை எதிர்நோக்கும் சில பிரச்சனைகள் ஆராயப்பட்டுள்ளன. இலங்கையின் வெளிநாட்டு கொள்வனவு நிலை பற்றிய சில நீண்ட கால அடிப்படைப் போக்குகள் பற்றியும் மேற்குறித்த பக்கங்களில் குறிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இந்நாட்டில் அண்மைக்கால நிதி நாணய விரிவினால் உள்நாட்டுத் துறையில் ஏற்பட்ட சமநிலை இன்மையையும் எடுத்துக் காட்டியுள்ளது. மூன்று பெரிய குறிக்கோள்களை இலங்கை இப்போது பின்பற்ற வேண்டியிருக்கிறது. முதலாவதாக கேள்விக்கும் நிரம்பலுக்கும் உள்ள நாணய சமநிலை இன்மையைக் குறைக்க வேண்டும். இந்தக் குறிக்கோளிற்கமைய அதிகரித்த உள்நாட்டு வளங்களை அபிவிருத்திக்குப் பயன்படுத்தும் நோக்கத்தோடு சேமிப்புக்களைக் கூட்டி நுகர்விலேற்படும் அதிகரிப்பைக் குறைத்து ஒன்று திரட்டல் வேண்டும். அத்தோடு வெளிநாட்டு வளங்களின் உள்ளோட்டத்தை அதிகரித்து குறைந்தளவு இறக்குமதிச் செலவிற்கும் வெளிநாட்டு வருவாய்க்கும் உள்ள இடைவெளியை நிரப்ப வேண்டும். இந்த நோக்கங்கள் ஒன்றை ஒன்று தங்கி உள்ளன. நாணய சமநிலை இன்மையைக் குறைத்து கிடைக்கத்தக்க நிரம்பல்களின் அளவைக் கூட்டுவதற்கு அதிகரித்த வெளிநாட்டு சாதனங்களின் உள்ளோட்டம் உதவியாய் இருக்கும். நாணய சமநிலை இன்மையைக் குறைப்பதால் ஏற்படக்கூடிய திருந்திய நிலையான நிதி நிலையின் பின்னணியில் வெளிநாட்டு சாதனங்களின் உள்ளோட்டம் பெருகக் கூடும். உற்பத்தித் துறையில் அதிகரித்த உள்நாட்டு முயற்சி இருப்பின் இந்நாட்டின் பொருளாதாரத்தில் உள்ள அமுக்கத்தை தளர்த்துவதுடன் வெளிநாட்டு உதவியை நன்முறையில் பயன்படுத்தவும் துணையாய் இருக்கும். நாணய விரிவுக் குறைப்பால் மட்டும் இலங்கையின் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது. குறைந்த விசையுள்ள வளர்ச்சியின் அடிப்படையில் நாணயச் சமநிலையோ அன்றிக் குறைந்த மட்ட இறக்குமதியின் அடிப்படையில் வெளிநாட்டுக் கொள்வனவு சமநிலையோ இலங்கைக்காயினும் அல்லது எந்த வளர்ச்சி பெறும் நாட்டிற்காயினும் ஏற்ற குறிக்கோள்கள் அல்ல. உண்மையில், பொருளியல் வளர்ச்சி புது உற்சாகத்தோடு கூடிய ஒரு சூழ்நிலையில் தேவையானது என்னவெனில் நாணயத்தின் நிலையான தன்மையும் சமநிலையுமேயாகும்.